# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 15 செவ்வாய்க்கிழமை 28.01.2025 கதிர் 081


## இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னதாக இலஞ்ச, ஊழல் தொடர்பில் தான் காத்திரமான நடவடிக்கைகளை எடுத்து தனது வாக்குறுதியை நிறைவேற்ற முயற்சிப்பதாக ☞ 2

### போதைப் பொருளுடன் தொடர்புபடுத்தி

# மாணவர்கள் பிரச்சினையை திசைதிருப்பி திரிபுபடுத்தல்

### கலைப்பீடம் தவிர்ந்த அனைத்துப் பீட மாணவர் ஒன்றியங்களும் கூட்டாக அறிக்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியதையொட்டி நிகழ்ந்த செயல்கள் யாவும் போதைப் பொருட்களிற்கு எதிரான நடவடிக்கையின் விளைவுகளாகச் சித்தரித்து திரிபுபடுத்தப்படுகின்றமை வேதனையானது. ஒரு சில நிர்வாக ஒத்தோடிகளின் துணைகொண்டு புதிய புனைவு என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடம் தவிர்ந்த அனைத்துப் பீட மாணவர் ஒன்றியங்களினதும் கூட்டு அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களினால் ஜனவரி 24, 25 திகதிகளில் நடத்தப்பட்ட உண்ணாவிரதப் போராட்டமானது நான்கு அம்சக் கோரிக்கைகளினை முன்வைத்து நடைபெற்றிருந்தது. தற்பொழுது ஒரு சில ☞ 2

## போதைப் பாவனையை எதிர்க்கும் காலப் பொறுப்பை ஏந்தவேண்டும்

### பேராசிரியர் ரகுராம் அறைகூவல்



இளம் சமுதாயத்தை நாசமாக்க கூடிய போதை பாவனையை தடுத்து நிறுத்தி ஒரு ஆரோக்கியான சமுதாயத்தை உருவாக்க நாம் அனைவரும் இந்த காலப் ☞ 8

## யாழ். பல்கலை விரிவுரையாளர்கள் இன்று முதல் வகுப்புப் புறக்கணிப்பு

### பேரவை முடிவை திரும்பப் பெறக்கோரி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நேற்று முதல் காலவரையின்றி விரிவுரைகளை புறக்கணிக்க தீர்மானித்துள்ளனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நேற்று அவசரமாகக் கூடிக் கலந்துரையாடிய பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மையில் இடம்பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவைக் கூட்டத்தின் பின்னர் பல்கலைக்கழகத்தின் கலை ☞ 8

### துணைவேந்தராகிவிடுவாரோ என்ற அச்சத்தில்

## கலைப்பீடாதிபதி பதவி விலக தூண்டப்பட்டிருக்கிறார் – அனந்தி

இளம் வயதில் அடுத்த துணைவேந்தராகி விடுவாரோ என்ற அச்சத்திலேயே கலைப்பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் பதவி விலகத் தூண்டப்பட்டுள்ளார்- ☞ 8

## கலைப்பீடாதிபதியின் குழப்பத்தால் யாழ். பல்கலையில் கற்றல் பாதிப்பு

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதி ரகுராம், பல்கலைக் கழகப்பேரவை எடுத்த முடிவுக்கு எதிராக பதவி விலகியதைத் தொடர்ந்து கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழகம் விரிவுரையாளர்கள் மாணவர்கள் என்று இரண்டாகப் பிளவுபட்டு எதிர் எதிர் நிலைப்பாடுகளை எடுத்துள்ளது.

தமது உறுப்பினருக்கு ஆதரவாக பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் இன்று முதல் விரிவுரைகளைப் புறக்கணிப்பதாக அறிவித்துள்ளது. பதிலாக, தமது மாணவர்களின் போராட்டம் போதைப்பொருள் மற்றும் சமூகச் சீரழிவு ☞ 9

## மோசடி வழக்கில் யோஷிதவை சந்தேகநபராக சேர்க்கவில்லை

### நீதி அமைச்சர் தெரிவிப்பு



நிதி மோசடி வழக்கில் யோஷித ராஜபக்ச இதுவரை சந்தேகநபராகப் பெயரிடப்படவில்லை என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

யோஷித்த ராஜபக்ச கைது செய்யப்பட்ட ஒரே நாளின் பின்னர் பிணையில் ☞ 8

## கல்கிஸை - காங்கேசன் இடையே இனி காலை தொடருந்துச் சேவை

### இரவு தொடருந்து கல்கிஸை செல்லாது

வடக்குக்கு காலை வேளையில் தொடருந்து சேவையை ஆரம்பிக்குமாறு பல்வேறு தரப்பினர் வலியுறுத்தியுள்ளனர். இதற்கமைய எதிர்வரும் இரண்டு வாரங்களில் கல்கிஸ்ஸை மற்றும் வெள்ளவத்தை ஆகிய தொடருந்து நிலையங்களில் நிறுத்தக்கூடிய வகையில் வடக்குக்கு புகையிரத சேவையை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம் என தொடருந்துத் திணைக்கள பொதுமுகாமையாளர் தம்மிக ஜயசுந்தர தெரிவித்தார்.

அவர் நேற்று தொடருந்து திணைக்களத்தின் ☞ 9

## சொன்னால்கூட போகமாட்டேன் என்கிறார்கள் மக்கள் மாறிவிட்டனர்: தலைவர் மாறவில்லை

### பெயர் சொல்லாமல் மகிந்தவை தாக்கிய ஜனாதிபதி



ஜனாதிபதி, அமைச்சர்கள், மக்கள் மாற்றமடையும் போது பழைய தலைவர்களால் மாற்றமடைய முடியவில்லை. இதனைச் சரிசெய்ய முற்பட்டால் பழிவாங்கல் என்கிறார்கள். நாம் அவர்களை மாறுமாறே கூறுகிறோம். அதில் பழிவாங்களோ, கோபமோ அல்லது ஆத்திரமோ இல்லை. நாம் கூறுவதற்கு முன்னதாகவே சென்றிருக்கவேண்டும். ஆனால் நாம்கூறியும் செல்லமாட்டார்கள். வழக்கு தாக்கல் செய்கிறார்கள். அட்டையை மெத்தையின் மீது வைக்க முடியாது. அது பழைய பாதையிலேயே செல்லும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அவர் தம்புத்தேகம பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான நம்பிக்கை ☞ 8

## ஐதேக - ஐமச பேச்சு இதுவரை வெற்றி

### தலதா அத்துக்கோறள தெரிவிப்பு

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து போட்டியிடுவது தொடர்பில் கலந்துரையாடி வருகிறோம். ☞ 8

## தமிழ் அரசுக்கு எதிரான சிவமோகனின் கோரிக்கையை ஏற்க நீதிமன்று மறுப்பு

### இடைக்காலத் தடை விதிக்க முடியாதென நிராகரிப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்து தம்மை இடைநிறுத்தி ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்திய மத்தியகுழுவின் தீர்மானத்திற்கு எதிராக அதன் உறுப்பினரான மருத்துவர் சிவமோகன் தாக்கல் செய்த வழக்கில் இடைக்காலத் தடை உத்தரவு விதிக்க முடியாது என்று நீதிமன்றம் மறுத்துவிட்டது. முகத்தோற்ற அளிவிலேயே இந்த வழக்குக்குக் காரணம் எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை என்பதால் இடைக்காலத் தடை விதிக்க நீதிமன்றம் மறுத்துவிட்டது.

தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற ☞ 8

## பொய் வாக்குறுதியை வழங்கி அரசமைப்பை மீறிவிட்டார்கள்

### ஆளும்தரப்பு மீது கம்மன்பில குற்றச்சாட்டு

மக்களுக்கு பொய்யான வாக்குறுதியை வழங்கி அரசாங்கம் அரசியலமைப்பை மீறியுள்ளது. ஜனாதிபதியும் அரசாங்கமும் ☞ 2

## இனி இது .....

மக்களை நம்ப வைக்கும் தேசிய மக்கள் சக்தி தீவிரமாக முயன்று வருகையில், முன்னாள் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்னவுக்கு எதிராக மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றில் ஜனவரி 8 இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஒரு குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் அதிகார சபையின் செலவில் 3,000 வெசாக் வாழ்த்து அட்டைகள் அச்சிட்டதன் மூலம் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபைக்கு 128,520 ரூபாய் நஷ்டம் ஏற்படுத்தினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றொரு குற்றச்சாட்டு ஊழல் குற்றத்தை உள்ளடக்கியது, இதில் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை மூலம் 360,000 ரூபாய் கட்டணம் செலுத்தி நஷ்டம் ஏற்படுத்தியது தொடர்பானது.

மற்றைய வழக்கு, முன்னாள் அமைச்சர் சிலாபத்தில் உள்ள தேசிய சேமிப்பு வங்கியின் கணக்கில் 494,000 ரூபா வரவு வைத்ததன் மூலம் சிவில் விமான போக்குவரத்து அதிகார சபைக்கு நஷ்டம் உண்டாக்கியது தொடர்பானதாகும்.

ஒரு அமைச்சர் இவ்வளவு பணத்தைத்தான் ஊழல் செய்தார் என்று சொல்வது அரசியல் வர்க்கத்திற்கே கேவலமானது என்று எனது நண்பர் ஒருவர் கலைப்படுகிறார். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் வாசகர்களே!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மாணவர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாக மற்றும் அரசியல் நோக்கங்களிற்காக அது முழுமையாகத் திரிபுபடுத்தப்பட்டுப் போராட்டத்தின் நோக்கம் முழுமையாக திசை மாற்றம் செய்யப்பட்டு வருகின்றது. போராட்டத்தின் நோக்கத்தினையும் சரியான புரிதலையும் வழங்கும் நோக்கத்துடன் இந்த ஊடக அறிக்கையினை வெளியிடுகின்றோம்.

மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டமானது பின்வரும் நான்கு அம்சக் கோரிக்கைகளினை முன்வைத்து நடைபெற்றிருந்தது.

விதிகளிற்குப் புறம்பாக நடைபெறும்/ நடைபெற்ற மாணவர்கள் மீதான விசாரணைகளை உடன் நிறுத்துதல்,

போராடுதல் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் உள்ளிட்ட மாணவர்களின் அடிப்படை உரிமைகளை உறுதி செய்தல்,

விரிவுரையாளர்கள் மீதான முறைகேடுகளையும் பாரபட்சமின்றி விசாரணை செய்தல்,

மாணவர்களின் கற்றலிற்கான சுதந்திரத்தை உறுதி செய்து மாணவர்களிற்கு உடனடி நிவாரணம் வழங்குதல்.

எமது பல்கலை மாணவர்கள் மீது விதிக்கப்பட்ட வகுப்புத் தடைகள் விதிமீறல்களுடனும் உரிய கால நீட்டிப்புக்களுடனும் நடைபெறவில்லை என்று 25.01.2025 அன்று நடைபெற்ற பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டத்தில் கண்டறியப்பட்டுள்ளது. கல்லாசனங்கள் அகற்றப்பட்ட விடயத்தில்கூட எவ்வித நிர்வாக நடைமுறைகளும் பின்பற்றப்படாமலும், ஒப்புதல்கள் பெறப்படாமலும் பொதுச் சொத்தொன்று உடைத்துத் தகர்க்கப்பட்டுள்ள குற்றம் நிகழ்த்தப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது.

மேற்படி விதிமீறல்களுடன் நடைபெற்ற விடயங்கள் குற்றமெனக் கணிக்கப்பட்ட பின்னர், நிகழ்ந்த செயல்கள் யாவும் போதைப் பொருட்களிற்கு எதிரான நடவடிக்கையின் விளைவுகளாகச் சித்தரித்து திரிபுபடுத்தப்படுகின்றமை வேதனையானது. முதலாம் ஆண்டு மாணவர்களின் பாடத்தெரிவுச் சிக்கலில் உள்ள பிறழ்வுகளையும், புலன (வட்ஸ்அப்) குழுவில் கலந்துரையாடிய மாணவனுக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டமையும் திட்டமிட்டு மடைமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதிகார பீடங்கள் தங்களின் நலன்களிற்காகப் போராடும் வர்க்கங்களைப் பிரித்தாளும் வழமை யாவரும் அறிந்ததே! அவ்வாறுதான் ஒரு சில நிர்வாக ஒத்தோடிகளின் துணைகொண்டு புதிய புனைவுகள் எம்மத்தியில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

மாணவர்கள் மீது நடைபெற்ற ஒழுக்காற்று விசாரணைகள் எவற்றிலும் கல்லாசனங்களோ, போதைப் பொருட்களோ நேரடியாகத் தொடர்புபடாத நிலையிலும் ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்துகின்றோம். மாணவர் சமூகமாக நாங்கள் ஒருபோதும் போதையை ஆதரித்ததுமில்லை, ஆதரிக்கப் போவதுமில்லை. மாறாக 'காலில் புண் என்றால் காலினை வெட்டியெறிவதற்குப் பதில் அதனை ஆற்றுவதே சமூகப் பொறுப்பு'. அதாவது கல்லாசனங்களால் ஏதேனும் சிக்கல் நிலை இருப்பின் அதற்கான முற்காப்பு நடவடிக்கைகளினை மேற்கொள்ளுவதும், அதனை தடுத்து நிறுத்துவதுமே மாணவர் ஒழுக்கம்சார் தரப்பினரின் கடமையும் பொறுப்புமாகும்.

மாறாக பொதுச்சொத்தினை தகர்ப்பது என்பது பெருந்தவறு. அதனை நியாயப்படுத்துவதற்காக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம் ஒரு நெறிபிறழ்ந்த சமூகம் எனும் காட்டிக் கொடுப்புக்கள் திட்டமிட்டு பல்கலைக்கழக மாண்பிற்கு களங்கமேற்படுத்தும் வகையில் ஒரு சில நிர்வாக ஒத்தோடிகளின் துணையுடன்; அரங்கேற்றப்படுகிறமை வேதனைக்குரியது.

மாணவர்களுடைய கருத்தாக சித்தரித்து ஒரு சிலரால் முன்னெடுக்கப்பட்ட ஊடக சந்திப்பென்பது மாணவர்களுடைய கருத்தன்று! யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், ஒன்றியப் பிரதிநிதிகள், பல்கலை நிர்வாகம் ஆகியவற்றை களங்கப்படுத்தும் வகையில் ஆதாரங்களேதுமற்ற திரிபுபடுத்தப்பட்ட பொய்யான செய்திகள் பொது வெளியில் பகிரப்பட்டு வருகின்றமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

பல்கலைக்கழக மாணவர்கள் மீதான பழிவாங்கல்கள் மற்றும் கற்றல் உரிமைகளிற்காக அனைவராலும் முன்னெடுக்கப்பட்ட உண்ணாவிரதப் போராட்டமானது மாணவர்களின் அடிப்படைக் கற்றல், சனநாயக உரிமை சார்ந்தே முன்னெடுக்கப்பட்டது. எனினும் அது திட்டமிட்டு திரிபுபடுத்தப்படுவதோடு, பல்கலைக்கழகத்திற்கு களங்கமேற்படுத்துவதாக அமைந்துள்ளது. பல்கலைக்கழக பேரவையினையும் துணைவேந்தரையும் திட்டமிட்டு குற்றஞ்சாட்டும் நோக்கில் இவை பரப்பப்படுகின்றமையினையும் சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றோம் - என்றுள்ளது.

முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர் ஒன்றியம், விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம், மருத்துவர் பீட மாணவர் ஒன்றியம், விவசாய பீட மாணவர் ஒன்றியம், இணைந்த சுகாதார கற்கைகள் பீடம், இந்துக் கற்கைகள் பீடம், தொழில்நுட்ப பீடம், சித்தமருத்துவ பீடம் ஆகிவற்றின் மாணவர் ஒன்றியங்களினது தலைவர்களது கையெழுத்தோடு இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர் ஒன்றியங்களினதும் கூட்டு அறிக்கை

27.01.2025

எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களினால் கடந்த 24, 25 ஆம் திகதிகளில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டமானது நான்கு அம்சக் கோரிக்கைகளினை முன்வைத்து நடைபெற்றிருந்தது. தற்பொழுது ஒரு சில நிர்வாக மற்றும் அரசியல் நோக்கங்களிற்காக அது முழுமையாக திரிபுபடுத்தப்பட்டு போராட்டத்தின் நோக்கம் முழுமையாக திசை மாற்றம் செய்யப்பட்டு வருகின்றது. போராட்டத்தின் நோக்கத்தினையும் சரியான புரிதலையும் வழங்கும் நோக்கத்துடன் இந்த ஊடக அறிக்கையினை வெளியிடுகின்றோம்.

குறித்த உண்ணாவிரதப் போராட்டமானது பின்வரும் நான்கு அம்சக் கோரிக்கைகளினை முன்வைத்து நடைபெற்றிருந்தது. விதிகளிற்குப் புறம்பாக நடைபெறும் / நடைபெற்ற மாணவர்கள் மீதான விசாரணைகளை உடன் நிறுத்துதல், போராடுதல் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் உள்ளிட்ட மாணவர்களின் அடிப்படை உரிமைகளை உறுதி செய்தல், விரிவுரையாளர்கள் மீதான முறைகேடுகளையும் பாரபட்சமின்றி விசாரணை செய்தல், மாணவர்களின் கற்றலிற்கான சுதந்திரத்தை உறுதி செய்து மாணவர்களிற்கு உடனடி நிவாரணம் வழங்குதல்.

எமது பல்கலை மாணவர்கள் மீது விதிக்கப்பட்ட வகுப்புத்தடைகள் விதிமீறல்களுடனும் உரிய கால நீட்டிப்புக்களுடனும் நடைபெறவில்லை என்று 25.01.2025 அன்று நடைபெற்ற பல்கலைக்கழகப் பேரவைக் கூட்டத்தில் கண்டறியப்பட்டுள்ளது. கல்லாசனங்கள் அகற்றப்பட்ட விடயத்தில்க் கூட எவ்வித நிர்வாக நடைமுறைகள் பின்பற்றப்படாமலும், ஒப்புதல்கள் பெறப்படாமலும் பொதுச் சொத்தொன்று உடைத்துத் தகர்க்கப்பட்டுள்ள குற்றம் நிகழ்த்தப்பட்டுள்ளமையினையும் பேரவையானது கண்டறிந்துள்ளமை நோக்கத்தக்கது.

**மேற்படி விதிமீறல்களுடன் நடைபெற்ற விடயங்கள் குற்றமெனக் கணிக்கப்பட்ட பின்னர் நிகழ்ந்த செயல்கள் யாவும் போதைப் பொருட்களிற்கு எதிரான நடவடிக்கையின் விளைவுகளாக சித்தரித்து திரிபுபடுத்தப்படுகின்றமை வேதனையானது.** முதலாம் ஆண்டு மாணவர்களின் பாடத்தெரிவுச் சிக்கலில் உள்ள பிறழ்வுகளையும், Whatsapp குழுவில் கலந்துரையாடிய மாணவனுக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டமையும் திட்டமிட்டு மடைமாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதிகார பீடங்கள் தங்களின் நலன்களிற்காக போராடும் வர்க்கங்களை பிரித்தாளும் வழமை யாவரும் அறிந்ததே! அவ்வாறு தான் ஒரு சில நிர்வாக ஒத்தோடிகளின் துணை கொண்டு புதிய புனைவுகள் எம்மத்தியில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

மாணவர்கள் மீது நடைபெற்ற ஒழுக்காற்று விசாரணைகள் எவற்றிலும் கல்லாசனங்களோ, போதைப் பொருட்களோ நேரடியாகத் தொடர்புபடாத நிலையிலும் ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்துகின்றோம். மாணவர் சமூகமாக நாங்கள் ஒருபோதும் போதையை ஆதரித்ததுமில்லை, ஆதரிக்கப் போவதுமில்லை. மாறாக ***"காலில் புண் என்றால் காலினை வெட்டியெறிவதற்குப் பதில் அதனை ஆற்றுவதே சமூகப் பொறுப்பு".*** அதாவது கல்லாசனங்களால் ஏதேனும் சிக்கல் நிலை இருப்பின் அதற்கான முற்காப்பு நடவடிக்கைகளினை மேற்கொள்ளுவதும், அதனை தடுத்து நிறுத்துவதுமே மாணவர் ஒழுக்கம் சார் தரப்பினரின் கடமையும் பொறுப்புமாகும். மாறாக பொதுச் சொத்தினை தகர்ப்பது என்பது பெருந்தவறு. அதனை நியாயப்படுத்தும் விதத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம் ஒரு நெறிபிறழ்ந்த சமூகம் எனும் காட்டிக் கொடுப்புக்கள் திட்டமிட்டு பல்கலைக்கழக மாண்பிற்கு களங்கமேற்படுத்தும் வகையில் ஒரு சில நிர்வாக ஒத்தோடிகளின் துணையுடன் அரங்கேற்றப்படுகிறமை வேதனைக்குரியது.

# துறைமுக தாமதங்கள் தொடர்வதால் பாரவூர்தி சாரதிகள் போராட்ட முஸ்தீபு

துறைமுகத்தில் கொள்கலன்களை அகற்றுவதில் ஏற்படும் தாமதங்கள் இந்த வாரத்திற்குள் தீர்க்கப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக கொள்கலன் பாரவூர்தி (லொறி) சாரதிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

துறைமுகத்திலிருந்து கொள்கலன்களை அகற்றுவதில் ஏற்படும் தாமதங்கள் சாரதிகளை கடுமையாகச் சிரமப்படுத்துகின்றன என்று தெரிவித்தார் கொள்கலன் பாரவூர்தி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுள,

அவர் இது குறித்து தெரிவித்தாவது:

அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாதது உட்பட லொறி சாரதிகள் பல சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இந்த வாரத்திற்குள் இந்த தாமதங்கள் தீர்க்கப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவோம்.

தொழிற்சங்க நடவடிக்கை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி துறைகள் இரண்டையும் பாதிக்கும். துறைமுகத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு இடையே ஒருங்கிணைப்பு இல்லாததே தாமதத்திற்குக் காரணம்.

சுங்கத்துறைக்கு அப்பால் அதனுடன் தொடர்புடைய பிற அரச நிறுவனங்களும் 24 மணி நேரமும் பணியாற்றவேண்டும். பிரச்சினையைத் தீர்க்க பாதுகாப்புப் படையினரை ஆளும்தரப்பு கடமைகளில் ஈடுபடுத்த வேண்டும் என்றார்.

### உள்ளூராட்சி மன்றங்களுக்கான

# தேர்தல் திருத்தச் சட்டத்திற்கு எதிரான விசாரணை முடிவு

உள்ளூராட்சிமன்றத் தேர்தலின் விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்தின் சில சரத்துக்கள் அரசமைப்புக்கு முரணானவை என்று தீர்ப்பளிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணையை நிறைவுறுத்தியுள்ள உயர் நீதிமன்றம், தனது தீர்ப்பை ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற சபாநாயகருக்கும் அனுப்புவதாக நேற்று அறிவித்துள்ளது.

இரண்டு நாட்கள் நீடித்த வழக்கு விசாரணையை நிறைவுறுத்தி உயர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது. இந்த மனுக்களை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் உள்ளிட்ட நான்கு தரப்பினர் தாக்கல் செய்திருந்தனர்.

இதேவேளை, ஏப்ரல் மாதம் இரண்டாவது அல்லது நான்காவது வாரத்தில், உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும் என்று தான் நம்புகிறார் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூறுகிறார்.

யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார். உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கான சட்டமூலத்தை, அனைத்துக் கட்சிகளும் கூட்டாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அனைத்து கட்சிகளின் தலைவர்களது ஒப்புதலுடன், உள்ளூராட்சிமன்றத் தேர்தலை மீண்டும் நடத்துவதற்கான சட்டமூலத்தை, ஆளும்தரப்பு நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. பல தரப்பினர் தற்போது நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். ஆனால், இது தேர்தல்களை நடத்துவதற்கு எந்தவொரு குறிப்பிட்ட தடையையும் ஏற்படுத்தாது என்று நாங்கள் நம்புகிறோம். வழக்கு முடிவு செய்யப்படும் நேரத்தில், நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வெளியிடும். ஆனால், நீதிமன்றத்திற்கு அதற்குக் குறைந்த நாட்களே உள்ளன. எனவே, ஏப்ரல் இரண்டாவது வாரம் அல்லது நான்காவது வாரத்தில் தேர்தல் நடத்தப்படும் என்று நம்புகிறோம். ஏனென்றால், இந்தப் பிரதேச சபைத் தேர்தல்களை, வடக்கு மாகாணத்திலும் நாடு முழுவதும் விரைவில் நடத்தவே நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்றார்.

வேட்புமனுக்கள் கோரப்பட்ட பின்னர், தமிழ் - சிங்கள சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் நடத்தப்படும் என்று, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, டிசம்பர் 20 அன்று, மல்வத்து பீடத்தின் மஹாநாயக்க தேரரிடம் கூறியிருந்தார்.

இலங்கை முழுவதும் 325 உள்ளூராட்சிமன்ற நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் 270 பிரதேச சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 23 நகராட்சிமன்றங்களுக்குத் தேர்தல் நடத்தப்படவேண்டியுள்ளது.

## பொய்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாவம் என்றே குறிப்பிட வேண்டுமென பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் நேற்று கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சிக் அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் அரசமைப்பை அறியாவிடினும் நீதியரசர் (ஓய்வுநிலை) அரசமைப்பையும், சட்டங்களையும் நன்கு அறிவார். ஆகவே தேர்தல் மேடைகளில் குறிப்பிட்டதை போன்று முன்னாள் ஜனாதிபதிகளின் ஓய்வூதியக் கொடுப்பனவை இரத்துச் செய்ய முடியாது என்பதை ஆளும்தரப்பிடம் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் ஓய்வூதியக் கொடுப்பனவை இரத்துச் செய்வதாக தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையில் கூறியிருந்தது. அவ்வாறாயின் இவர்கள் அரசமைப்பின் 36(2) உறுப்புரையை அறியவில்லை என்று பொருள்.

இந்த வாக்குறுதியை மறக்கடிக்கச் செய்வதற்காகவே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னாள் ஜனாதிபதிகளை அரச உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து வெளியேற்றுவதாக குறிப்பிட்டுக் கொள்கிறார். மேலும், மக்களுக்கு பொய்யான வாக்குறுதியை வழங்கி ஆளும்தரப்பு அரசமைப்பை மீறியுள்ளது. ஜனாதிபதியும் ஆளும்தரப்பும் பாவம் என்றே குறிப்பிட வேண்டும் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கணணிப் பயிற்சி நெறித் திட்டம்

இன்றைய உலகில் அதிகமான குற்றச் செயல்கள் இடம்பெற்று குற்றவாளிகளும் அதிகரித்து வருகின்றனர். இத்தகைய குற்றவாளிகளைப் புணர்வாழ்வளித்து அவர்களைச் சமுதாயத்தோடு இணைக்கின்ற மிக முக்கியமான பணியை யாழ்ப்பாணச் சிறைச்சாலை வழங்குகின்றது.

இங்கே சுமார் எழுநூற்றிற்கும் அதிகமான கைதிகள்

புனர்வாழ்வளிக்கப்படுகின்றனர். அதிகளவான கைதிகள் போதைப் பொருளுக்கு அடிமையாகித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்குத் தொழிற் திறன்களும் தொழிலும் இல்லாது இருப்பது காரணமாக அமைகின்றமை ஆய்வுகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.

அந்த வகையில் கைதிகளுக்கான தொழிற் திறனை வழங்கி தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து மீண்டும் அவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடாது நற்பிரஜைகளாக சமூகத்தில் இணைக்கும்

நோக்கில் சர்வதேச மருத்துவ சுகாதார அமைப்பு (ஐ.எம்.எச்.ஓ) அமெரிக்கா, இரத்னம் அறக்கட்டளை, இங்கிலாந்து இணைந்து இவ்வாறான திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

கைதிகளைப் புனர்வாழ்வளித்து குறிப்பாகப் கைதிகளுக்கான மறுவாழ்வுச் சிகிச்சைத் திட்டம் ஒன்றை ஐ.எம்.எச்.ஓ., அமெரிக்கா, இரத்னம் பவுண்டேசன், லண்டன் ஆகியன இணைந்து கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம்

சிறைச்சாலையில் அங்குரார்ப் பணம் செய்து வைத்தனர்.

இது கைதிகளுக்கான கணணிப் பயிற்சிநெறி ஆகும். இந் நிகழ்வின்

பிரதம அதிதியாக அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் பொருளாளர் முரளி இராமலிங்கம் நிகழ்வை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.



நிகழ்விற்கு சிறைச்சாலை அட்தியட்சகர் இந்திரகுமார், நைற்றா முகாமையாளர் திருமுருகன், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

முரளி இராமலிங்கம் உரையாற்றுகையில் -

இது மிகவும் பயனளிக்கின்ற கைதிகளின் வாழ்க்கையை மாற்றுகின்ற ஒருதிட்டம் எனவும் இவ்வாறான பயன்தரு திட்டங்களுக்கு தாம் முன்னுரிமையளித்து மேற்கொள்வதாகவும் ஏற்கனவே தம்மால் இந்த சிறைச்சாலையில் பெண்களுக்கான தையல் பயிற்சிநெறி மற்றும் ஆண்களுக்கான உருக்கி ஒட்டுநர் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடைபெறுவதனை தாம் இன்று கண்டு மகிழ்ச்சியடைந்ததாகவும் இதுபோன்ற திட்டங்கள் எதிர்காலத்தில் இரத்தினம் பவுண்டேசன், இலண்டன் உடன் இணைந்து தம்மால் முன்னெடுக்கப்படும் என்றும் அனைவரும் இதில் பங்குகொண்டு நற்பிரஜைகளாக வெளியில் செல்ல வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.



சிறைச்சாலை அத்தியட்சகர் இந்திரகுமார் உரையாற்றுகையில் -

இத்தகையதிட்டம்யாழ்ப்பாணம்சிறைச்சாலையில் அங்குரார்ப்பணம் செய்ததையிட்டு தான் பெருமையடைவதாகவும் ஐ.எம்.எச்.ஓ– இரத்தினம் பவுண்டேசன், லண்டன் ஆரம்பித்துவைத்த தையற் பயயிற்சிநெறியில் முதற்கட்டத்தில் 15 பெண் கைதிகள் பயனடைந்து உள்ளனர் எனவும் தற்போது இரண்டாம் கட்டத்தில் 10 பெண் கைதிகள் பயிற்சி பெறுகின்றனர் எனவும் மற்றும் உருக்கி ஒட்டுநர் பயிற்சிநெறியில் 10 ஆண் கைதிகள் பயிற்சி பெறுகின்றனர் எனவும் இப் பயிற்சிநெறிகள் மிகச்சிறப்பாக நடைபெறுகின்றன எனவும் தற்பேது கணனிப் பயிற்சிநெறித் திட்டத்தை



அறிமுகப்படுத்திய முரளி இராமலிங்கம் அவர்களிற்கு வணக்கத்தையும் நன்றியையும் தெரிவிப்பதாகவும்; திட்டம் வெற்றியடைவதற்குரிய முழு ஒத்துழைப்புக்களையும் தாம் வழங்குவதாகவும் குறிப்பிட்டார்.

# கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் சம்மாந்துறையில் கைது

(தில்சாத் பர்வீஸ்)

சூட்சுமமான முறையில் மறைத்து வைத்திருந்த கேரளக் கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்தோடு கேரளக் கஞ்சாவையும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பிரிவினர் கைப்பற்றி உள்ளனர்.

இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு 07.45 மணியளவில் நடைபெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அல் அர்ஷத் பாடசாலைக்கு பின்பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு 07.45 மணியளவில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவினரினால் குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையின் போது 36 வயதுடைய 40 வீட்டுத் திட்ட பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் கேரளக் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடமிருந்து 1000 மில்லிகிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டதுடன், சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப்பொருள்களை சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், குறித்த சோதனை நடவடிக்கையானது, சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலதின் வழிகாட்டுதலில், சம்மாந்துறை பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே. சதீஸ்கர் தலைமையிலான பொலிஸ் உத்தியோகத்தர்களான எம். நிரஞ்சன், ஜிஹான் உள்ளிட்ட குழுவினர் இச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# எதிர்க்கட்சிகளை அடக்கி ஒடுக்கி சொந்த அரசியலைச் செய்கிறது

## ஆளும்தரப்பு மீது நாமல் சீற்றம்

ஆளும்தரப்பு எதிர்க்கட்சிகளை அடக்கி, தனது சொந்த அரசியலை முன்னெடுக்க முயற்சிக்கிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச குற்றம்சாட்டியுள்ளார்.

யோஷித ராஜபக்சவை நேற்றுக் காலை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்த நிலையில், அங்கு வந்திருந்த நாமல் செய்தியாளர்களிடம் பேசினார்.

நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பியவர் தாம் என்றாலும், அதற்கான விலையை தனது சகோதரர் கொடுக்க வேண்டியிருந்தது என்று அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

”ஏன் இதைச் செய்கிறார்கள் என்று என்னிடம் கேட்க வேண்டாம். அதனைப் பிரதி பாதுகாப்பு அமைச்சர், பொலிஸ் அமைச்சர் மற்றும் நாட்டின் ஜனாதிபதியிடம் கேளுங்கள். ஆனால், நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் செலவிட வேண்டிய நேரத்தை, அரசியல்வாதிகளையும் அவர்களது குடும்பத்தினரையும் வேட்டையாடுவதற்கு ஆளும்தரப்புப் பயன்படுத்துகிறது.

நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பியது நான்தான். சிறைக்கு செல்வது எனது தம்பி. நெடுஞ்சாலை வழியாக பெலியத்த வரை வந்து அவரைக் கைது செய்தது வீண். எங்களை வர சொன்னால் நாங்கள் வருவோம் அல்லவா. எரிபொருளை நிரப்பிவிட்டு பெலியாத்தவுக்குச் சென்றது வீண்தானே. அழைத்திருந்தால் வந்து உங்கள் சாட்சியத்தை அளிப்போம்.

நாங்கள் தவறு செய்திருந்தால், அதை நீதிமன்றத்தில் நிரூபியுங்கள். ஊடகங்களுக்கு படம் காட்டி மக்களின் பணத்தை வீணாக்காதீர்கள். இந்த வழக்கை, ஊழல் தடுப்புக் குழுவின் செயலாளரான தற்போதைய பொலிஸ் அமைச்சரே தொடங்கினார்.

அவர் தனது கடந்த கால ஆதாரங்களைப் பயன்படுத்தி, இன்று அதே வழியில் தனது அரசியல் வேட்டையை செயல்படுத்த முயற்சிக்கிறார். ஆளும்தரப்பு எதிர்க்கட்சிகளை அடக்கி, தனது சொந்த அரசியலை முன்னெடுக்க முயற்சிக்கிறது. நாங்கள் தெளிவாகத் தவறு செய்திருந்தால், அந்தத் தவறை நீதிமன்றத்தில் நிரூபியுங்கள். ஊடகங்களுக்கு படம் காட்டி பணத்தை வீணாக்காதீர்கள் என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## காற்று தர நிலையை பாதுகாக்க தீவிரமான கவனம் வேண்டும்

நாட்டின் பல பகுதிகளில் காற்றின் தர நிலை சற்று மோசமான நிலைகளை எட்டியுள்ளது. இதற்கமைய நாட்டில் 6 நகரங்களில் காற்றின் தரம் வீழ்ச்சியடைந்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

வடக்குப் பகுதியில் மாசுபட்ட காற்றின் எல்லை தாண்டிய நகர்வு காரணமாக கொழும்பு, யாழ்ப்பாணம், காலி, திருகோணமலை, பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம் ஆகிய இடங்களில் காற்றின் தரக் குறியீடு (AQI) ஆரோக்கியமற்ற நிலைக்குக் குறைந்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு (NBRO) எச்சரித்தது. இந்த நிலை உணர்திறன்மிக்கநபர்களுக்குசுவாசிப்பதில்சிரமத்தைஏற்படுத்தினால் மருத்துவ ஆலோசனையைப் பெறுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை பல தசாப்தங்களாக காற்றின் தரம் குறைவது தொடர்பான பிரச்சினையால் பாதிக்கப்பட்டு வருகின்றது. அதிகாரிகள் பெரும்பாலும் அவை தொடர்பான எச்சரிக்கைகள் மற்றும் வானிலை புதுப்பிப்புகளை வெளியிடுவதோடு தமது பணியை மட்டுப்படுத்துக்கொள்கின்றனர் என்றே தென்படுகின்றது.

உலகளவில் முன்னணி சுற்றுச்சூழல் மற்றும் பொது சுகாதார சவால்களில் ஒன்றாக காற்று மாசுபாடு உள்ளது, இது மனித ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழலில் குறிப்பிடத்தக்க பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. உலகளவில், உலக சுகாதார அமைப்பு (WHO) மதிப்பிட்டபடி, ஆண்டுதோறும் சுமார் ஏழு மில்லியன் அகாலச் சாவுகள் காற்று மாசுபாடு காரணமாக ஏற்படுகின்றன.

அதிக அளவு காற்று மாசுபாட்டிற்கு ஆளாவது பல எதிர்மறையான சுகாதார விளைவுகளுக்கு வழிவகுக்கும் என்கிறது உலக சுகாதார நிறுவனம், இதில் இதய நோய், பக்கவாதம், கடுமையான சுவாச நோய்த்தொற்றுகள் மற்றும் நுரையீரல் புற்றுநோய் அபாயம் என்பனவும் அடக்கம். குறுகிய மற்றும் நீண்ட கால வெளிப்பாடு இரண்டும் உடல்நல பாதிப்புகளுடன் தொடர்புடையவை. குழந்தைகள், முதியவர்கள் மற்றும் நீண்டகால சுகாதார நிலைமைகளைக் கொண்டவர்கள் அதிக பாதிப்புக்குள்ளாகின்றனர். காற்றின் தரத்தை மேம்படுத்துவது காலநிலை மாற்றத்தைத் தணிப்பதற்கும், குறிப்பாக குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளில் அதிக பாதிப்புகளால் பாதிக்கப்பட்ட மக்களைக் காக்கவும் உதவும்.

இலங்கையில் தொழில்துறை மற்றும் வணிகத் துறைகளில் விரைவான விரிவாக்கம் மற்றும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தொடர்ந்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை விரிவுபடுத்துவதன் காரணமாக காற்று மாசுபாடு அதிகரித்து வருகிறது. இது ஒரு பிரச்சினையாகவும் மேலெழுந்து வருகிறது.

2016 இல் தொடங்கப்பட்ட மகாவலி மேம்பாட்டு அமைச்சகத்தின் 'சுத்தமான காற்று 2025' செயல் திட்டம் கூறியது: 'முக்கிய நகர்ப்புற மையங்களின் விரிவாக்கம், மோட்டார் வாகனங்களின் பயன்பாட்டில் விரைவான அதிகரிப்பு மற்றும் நிலத்தடியிலிருந்து பெறப்படும் எரிபொருளின் பயன்பாட்டின் அதிகரிப்பு, பொருளாதார நடவடிக்கைகளின் விரைவுபடுத்தல் ஆகியன இந்தச் சிக்கலை மோசமாக்கியுள்ளன. அனல் மின் நிலையங்கள் மற்றும் பிற தொழில்துறை நடவடிக்கைகள் இந்தப் பிரச்சினையுடன் நேரடி தொடர்பைக் கொண்டுள்ளன' என்று தெரிவித்துள்ளது.

கடந்த சில வருடங்களாக காற்று மாசுபாட்டினால் ஏற்படும் பாதிப்புத் தொடர்ந்து அதிகரித்தே வருகின்றது. ஆனால், அதனைத் தடுப்பதற்கான விரைவான நடவடிக்கைகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பெருந்திட்டங்கள் எவையும் முன்வைக்கப்படவுமில்லை, எதிர்காலத்தில் காற்று மாசின் அளவைக் குறைப்பாதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. 2022 டிசம்பரில் வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட ஒரு சூறாவளிப் புயலின்போது வடக்கு மாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணத்தில் காற்று மாசுபாடு 294 ஆக இருந்தது, இது அதிகபட்ச பாதுகாப்பான மதிப்பான 150ஐ விட அதிகமாகும். இலங்கையிலேயே மிக அதிகமான காற்று மாசு குறியீடாக இது பதிவானது.

இருப்பினும், காற்று மாசுபாட்டை நிவர்த்தி செய்வதில் இலங்கை அதன் ஒழுங்குமுறை அமைப்பில் இடைவெளிகளைக் கொண்டுள்ளது. ஆசியா அறக்கட்டளை மற்றும் அரசுக்குச் சொந்தமான தொழில்துறை சேவைகள் பணியகம் (ISB) நடத்திய கூட்டு ஆய்வின்படி, சட்டத் தடைகள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள், அறிவு மற்றும் அணுகுமுறைகளை மாற்ற வேண்டியிருப்பது தெரியவந்திருக்கிறது.

பொருளாதார வளர்ச்சிக்காக தொழிற்றுறை வளர்ச்சியில் அரசுகள் கவனம் செலுத்துகின்ற அதேவேளையில் அதனால் சுற்றுச்சூழலில் ஏற்படும் காற்று மாசு போன்ற அபாயகரமான விளைவுகள் மீதும் கவனம் செலுத்தப்படுவது அவசியம்.

வளர்ந்து வரும் அபாயத்தை தீவிரமாக எடுத்துக்கொண்டு சட்டத்தில் உள்ள இடைவெளிகளைப் புதுப்பிக்கவும், பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தீங்கு விளைவிக்கும் நடைமுறைகளைக் குறைக்க தொழில்துறையுடன் கலந்துரையாடி புதிய விதிகளை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.



# மஹிந்தாவும் ஜே.வி.பியும்

## அன்புக்கும் வெறுப்புக்கும் இடையில் நூலிழை வெளிதான்

**உபுல் ஜோசப் பெர்னாண்டோ**

'ராஜபக்சக்கள் இப்போது அம்பாந்தோட்டைக்குச் சென்று அரசியல் செய்ய முடியுமா?'

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன ஒரு தடவை நாடாளுமன்றத்தில் எழுப்பிய இந்தக் கேள்விதான் அப்போது எதிர்க்கட்சியில் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்சவை அமைதிப்படுத்தியது. இளைஞர்கள் காணாமல் போவது குறித்து தொடர்ந்து நாடாளுமன்றத்தில் கவலை எழுப்பி வந்த மகிந்த, விஜேரத்னவின் கூர்மையான பதிலடியால் வெட்கப்பட்டார்.

1988--1989இல் ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது, மகிந்த ராஜபக்ச அம்பாந்தோட்டையின் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளராகப் பணியாற்றினார். 1988 ஜனாதிபதித் தேர்தலில் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளரான சிறிமாவோவுக்கு ஜேவிபியின் ஆதரவைப் பெறுவதற்காக அதனுடன் பேச்சு நடத்த உருவாக்கப்பட்ட ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்களில் ஒருவராகவும் அவர் இருந்தார். இந்தப் பேச்சுக்கள் பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான மாணவர் கூட்டமைப்பு மூலம் நடத்தப்பட்டன, ஆனால் இறுதியில் தோல்வியடைந்தன.

ஜே.வி.பி. தேர்தலைப் புறக்கணித்து சிறீமாவோவின் தோல்விக்கு வழிவகுத்தது, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான எந்தவொரு சாத்தியமான கூட்டணியையும் இந்த நகர்வு முடிவுக்குக் கொண்டுவந்தது.

1989 பொதுத் தேர்தலுக்குப் பிறகு, சிறீமாவோ உள்ளிட்ட ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர், ஜே.வி.பி.யை அடக்குவதற்கான ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் முயற்சிகளுக்கு ஆதரவளித்தனர். மஹிந்த உள்ளிட்ட ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்கள், ஜே.வி.பி. எழுச்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக பிரேமதாச கூட்டிய அனைத்துக் கட்சிப் பேச்சுக்களில் பங்கேற்றனர். இந்தக் காலகட்டத்தில், மகிந்தவும் மற்ற ஶ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்களும் ஜே.வி.பியின் அச்சுறுத்தல் காரணமாக அம்பாந்தோட்டைக்குச் செல்வதைத் தவிர்த்தனர்.

களுத்துறை மாவட்ட ஶ்ரீ லங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் சந்திரபால அபேவீரவை ஜே.வி.பி. படுகொலை செய்தது. இது மகிந்த குழுவினருக்கு அச்சத்தை அதிகரித்தது. மகிந்த உட்பட பல ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் தஞ்சம் புகுந்தனர், ஜே.வி.பி. மீதான பிரேமதாசவின் அடக்குமுறைக்கு அமைதியான ஆதரவை வழங்கினர்.

ஜே.வி.பி. ஒடுக்கப்பட்ட பின்னரே மஹிந்தவும் மற்றவர்களும் அம்பாந்தோட்டைக்குத் திரும்புவது பாதுகாப்பானது என்று உணர்ந்தனர். இருப்பினும், மோதலின்போது காணாமல்போன இளைஞர்கள் குறித்து மஹிந்த அவ்வப்போது குரல் கொடுத்தார். தனக்குப் பிரச்சினைகள் இருந்தபோதும் நாடாளுமன்றத்தில் இளைஞர்களுக்காகக் குரல் எழுப்பினார், மேலும் இந்த விவகாரத்தை சர்வதேச மனித உரிமை அமைப்புகளுக்குக்கூட எடுத்துச் சென்றார். ஒரு சந்தர்ப்பத்தில், ஜெனீவா மனித உரிமைகள் ஆணையத்திற்குச் செல்ல முயன்றபோது, கட்டுநாயக்க விமான நிலையத்தில் மகிந்த சி.ஐ.டி.யினரால் பிடிக்கப்பட்டார். சோதனையில் காணாமல்போன இளைஞர்களின் புகைப்படங்களை அவர் எடுத்துச் சென்றது கண்டுபிடிக்கப்பட்டது, இது பிரேமதாச ஆளும்தரப்பின் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்துவதற்கான அவரது உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது.

ஆளும்தரப்பின் மிரட்டல்களைக் கண்டு மகிந்த அஞ்சவில்லை. காணாமல் போனவர்களின் பெற்றோருடன் இணைந்து அவர் சங்கங்களை உருவாக்கினார். விகாரை விகாரையாக ஊர்வலம் சென்று, பிரேமதாசாவை சபிக்க தேங்காய் உடைத்தார். ஆர்ப்பாட்டங்களை நடத்தினார். இந்தக் காலகட்டத்தில், மக்கள் ஜேவிபி உறுப்பினர்களை பயங்கரவாதிகளாகக் கண்டனர். ஜேவிபி விதித்த அதிகாரப்பூர்வமற்ற ஊரடங்கு உத்தரவின் கீழ் மக்கள் அனுபவித்துக்கொண்டிருந்த துன்பங்களே இதற்குக் காரணம். இந்தத் துன்பத்தின் காரணமாகவே, ஜேவிபியை அடக்க பிரேமதாசாவின் ஆட்சியை மக்கள் ஆதரித்தனர்.

ஜேவிபி அடக்கப்பட்ட பிறகு, மீதமுள்ள ஜேவிபி ஆர்வலர்கள் பிரேமதாசவின் ஆளும்தரப்பு அடக்குமுறையைவிட மக்களின் வெறுப்புக்குக் கடுமையாகப் பயந்தனர். மக்களிடையே ஜேவிபியின் இந்த வெறுப்பை அழித்த ஒரே மனிதர் மகிந்த ராஜபக்ச. பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்ட கொலை செய்யப்பட்ட ஜேவிபி இளைஞர்கள் மீது மக்கள் கொண்டிருந்த வெறுப்பை அவர் தகர்த்தெறிந்தார், அவர்கள் மீது அனுதாபத்தை ஏற்படுத்தினார். ஜேவிபியை அடக்குவதன் மூலம் ஹீரோவாக மாறிய பிரேமதாசா, பின்னர் ஜேவிபியின் இரத்தக்களரியை முன்னிலைப்படுத்திய மஹிந்தாவின் பரப்புரையின் காரணமாகக் கொலைகாரன் என்று முத்திரை குத்தப்பட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியை நோக்கிப் பிடித்தி-ருந்த தனது துப்பாக்கியை ஜேவிபி ஶ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மீது திருப்பிய பிறகு, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜேவிபியைப் பாதுகாப்பதை நிறுத்தியது. ஆனால், ஜேவிபியை மீண்டும் பாதுகாத்ததன் மூலம் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாதுகாப்பை உறுதிப்படுத்தியவர் மகிந்தாதான். இருந்தாலும் 1994இல் ஶ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு, அம்பாந்தோட்டையிலிருந்து மகிந்தவுக்கு முதல் அரசியல் அச்சுறுத்தல் ஜே.வி.பியிடமிருந்துதான் வந்தது.

அந்தக் காலகட்டத்தில் மகிந்த ஜே.வி.பியைப் பார்த்து பயந்தார். தனது அரசியல் ஆதிக்கத்தை உடைக்க அம்பாந்தோட்டையில் ஜே.வி.பி. வலுவடைவதை மஹிந்தவால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. 1994 முதல் 2004 வரை மகிந்தவின் பரம எதிரி ஜே.வி.பிதான். ஜே.வி.பி. உடன் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி அமைத்தபோது, அந்தக் கூட்டணியைச் சீர்குலைக்க மகிந்த எல்லாவற்றையும் செய்தார். ஆனால் ஜே.வி.பி. ஆதரவு காரணமாகவே ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 2004 பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றது.

அந்தப் பொதுத் தேர்தலில் ஶ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெற்றாலும், அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களைத் தோற்கடித்து ஜே.வி.பி. அதிக எண்ணிக்கையிலான நாடாளுமன்ற ஆசனங்களை வென்றது. அதைக்கண்டு ஜனாதிபதியும் ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவருமான சந்திரிகாவும் பயந்தார். ஜே.வி.பி.யின் எழுச்சியைக் கண்டு அவர் மிகவும் பயந்ததாலேயே பிரதமர் பதவியை மஹிந்தவுக்கு

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# மஹிந்தாவும்...

4ம் பக்கத் தொடர்ச்சி...........



வழங்க முடிவு செய்தார், ஜே.வி.பியின் எழுச்சியைக் கட்டுப்படுத்தக்கூடிய சிறந்த மனிதர், ஜே.வி.பி.யுடன் அச்சமின்றி மோதியவர் என்ற காரணத்தாலேயே மகிந்தவுக்கு பிரதமர் பதவியை சந்திரிக்கா வழங்கினார்.

ஜே.வி.பி. செயலாளர் டில்வின் சில்வா மஹிந்தவுக்கு பிரதமர் பதவியை வழங்க வேண்டாம் என்று அனுப்பிய கடிதம்தான் அவரது முடிவை அச்சுறுத்தியது. ஜே.வி.பியின் அச்சுறுத்தல்களை மீறி அவர் மஹிந்தவைப் பிரதமராக்கினார். அப்போதைய விவசாய அமைச்சரும், ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமாரவின் பத்தாயிரம் குளங்கள் திட்டத்தில் ஊழல் நடந்ததாகக் குற்றஞ்சாட்டி, சந்திரிகா வழங்கிய அமைச்சரவைப் பத்திரத்தை மகிந்த ஊடகங்களுக்கு கசியவிட்டதை அடுத்து, ஜே.வி.பி. சந்திரிகாவின் ஆளும்தரப்பில் இருந்து விலகியது.

ஜே.வி.பி., தன்னை அறியாமலேயே சந்திரிகா மீது வெறுப்பை வளர்த்துக்கொண்டது. மகிந்தவும் அதில் தலையிட்டார். இறுதியாக, சந்திரிகாவுக்கு பாடம் கற்பிக்க 2005 ஆம் ஆண்டு மகிந்தவை ஜனாதிபதி வேட்பாளராக ஆக்க ஜே.வி.பி. விருப்பம் தெரிவித்தது. மஹிந்தவைத் தங்கள் தோள்களில் சுமந்தது ஜே.வி.பி.தான். மகிந்த வெற்றி பெற்றார். 2004 முதல் 2006 வரை, மகிந்தவும் ஜே.வி.பியும் நல்ல தேனிலவை அனுபவித்தனர். 2006க்குப் பிறகு, மஹிந்த ஜே.வி.பியை பிரித்தார். 2010 ஜனாதிபதித் தேர்தலில் பொன்சேகா வெற்றி பெற உதவுவதற்காக ஜே.வி.பி. நான்கு கால்களில் விழுந்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி வைத்தது. 2006 முதல் 2024 வரை, மகிந்த ஜே.வி.பியைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை, ஆனால் மகிந்த ஜே.வி.பியின் பரம எதிரியாக இருந்தார்.

2015 ஜனாதிபதித் தேர்தலில், ஜே.வி.பி. தனது வேட்பாளரை நிறுத்தவில்லை. மகிந்தவை தோற்கடிக்க பொது வேட்பாளர் மைத்திரிபால என்ற முறையில் ஐதேக வேட்பாளரை ஜே.வி.பி. ஆதரித்தது. 2015ஆம் ஆண்டில், மகிந்தவிற்கும் ராஜபக்ச குடும்பத்திற்கும் பாடம் கற்பிக்க மைத்ரி-ரணில் ஆளும்தரப்பின் திருடர்களைக் கவர்ந்திழுக்கும் குழுவில் அனுர இணைந்தார்.

மகிந்தாவை ஒழித்தால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பலவீனமடையும் என்றும், அதன் ஒரு பகுதி ஜேவிபியால் வெல்லப்படும் என்றும் அனுரவும் ஜேவிபியும் நினைக்கிறார்கள். ஆனால் ஜேவிபி ஒரு தவறு செய்து, மைத்ரி- - ரணில் ஆளும்தரப்பிடம் சென்று தீப்பந்தத்தைப் பிடித்தது, ஜேவிபி மேலும் கீழே சரிந்தது. ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தனர்.

2006 முதல் 2022 வரை மகிந்தா ஜேவிபியின் பரம எதிரியாக இருந்தபோதிலும், ஜேவிபி எப்போதும் 3% கட்சியாகவே இருக்கும் என்று மஹிந்த நினைத்தார். அவர் ஜேவிபியைத் தொடக்கூட இல்லை. ஜேவிபியின் ஒரு பகுதி பிரிந்து முன்னணிக் கட்சியை உருவாக்கியபோது, மஹிந்தா அனுரவுக்கு உதவினார். மஹிந்தாவின் ஆளும்தரப்பு முன்னணித் தலைவர் குமார் குணரத்னத்தைக் கைது செய்து அனுரவை வலுப்படுத்தியது.

2022 அரகலயா ஜேவிபியால் தொடங்கப்படவில்லை. அது முன்னணிக் கட்சியால் தொடங்கப்பட்டது. அந்த நேரத்தில் ராஜபக்சக்களை கோபப்படுத்த அனுரவும் ஜேவிபியும் விரும்பவில்லை. ரணிலை ஜனாதிபதியாக்க ராஜபக்சக்கள் முடிவு செய்தபோது, ரணிலை ஜனாதிபதியாக்க கோட்டா முடிவு செய்தபோது, நாடாளுமன்றத்தில் ஜனாதிபதித் தேர்தலில் நின்று, ரணிலையும் மகிந்தவையும் ஆதரித்தார்.

அதன் பிறகு, மஹிந்தவும் ராஜபக்ச குடும்பமும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் அழிக்கப்பட்டதைக் கண்ட ஜே.வி.பி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எதிரியான எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தை தாக்கி, அந்த 6.9 மில்லியன் வாக்குகளைப் பெறத் தொடங்கியது. 2024 இல், சஜித் ஜே.வி.பியின் இறுதி எதிரியானார்.

அந்த வாக்குகளில் மகிந்தவையும் ராஜபக்சக்களையும் தரைமட்டமாக்கி அனுரா 2024 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றார்.

ஜனாதிபதி பதவியையும் ஆளும்தரப்பையும் கைப்பற்றிய பிறகு, ராஜபக்சக்கள் மீண்டும் உயிர் பெற்று ராஜபக்சக்களிடமிருந்து பெற்ற 6.9 மில்லியன் வாக்குகளை மீண்டும் கைப்பற்றுவார்கள் என்று ஜே.வி.பி. அஞ்சுகிறது. இப்போது அனுரா மகிந்தவையும் ராஜபக்ச குடும்பத்தையும் தாக்குகிறார்.

மகிந்தவிற்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான ஒரு சொத்தைப் பிரிக்க முடியாது. அந்த சொத்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வாக்குத் தளமாகும், அது பின்னர் போஹோட்டுவாவாக மாறியது. ஜே.வி.பியின் மகிந்த மீதான வெறுப்பு அன்புக்கும் வெறுப்புக்கும் உள்ள வித்தியாசம்.



# பூந்தோட்டம் கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியை மீண்டும் இயங்கவைக்க நடவடிக்கை தேவை

## இயற்கையின் நண்பர்கள் இயக்கம் கோரிக்கை



வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளராகிய எஸ்.வேலாயுதம்பிள்ளையின் ஏற்பாட்டில் அன்றைய ஆரம்ப மாகாணக்கூட்டுறவுத் திணைக்களத்தில் அலுவலர்களாகக் கடமையாற்றிய பஞ்சலிங்கம், சிவராஜா, கோணேஸ்வரன் ஆகியோரின் பங்களிப்புடன் கூட்டுறவு பயிற்சி கல்லூரியானது திருகோணமலையில் 1989ஆம் ஆண்டு 'டொக்கியாட்' வீதியில் அமைந்துள்ள ஒரு தனியார் இல்லத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு பயிற்சி கல்லூரியின் முதலாவது அதிபராக கோபாலசிங்கம் அவர்கள் கடமையாற்றியிருந்தார்.

அதன் பின்னர் 1990 மே மாதத்தில் கூட்டுறவு பயிற்சி கல்லூரியானது தனியார் இல்லத்திலிருந்து திருகோணமலை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகம் இயங்கும் சிறு கைத்தொழில் திணைக்களத்தின் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு இயங்கி வந்தது.

1999 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வவுனியாவில் இக்கல்லூரியை நிரந்தரமான கட்டடத்தில் நிறுவுவதற்கென காணி வவுனியா பூந்தோட்டத்தில் மாகாணசபையால் ஒதுக்கப்பட்டு கூட்டுறவு பயிற்சி கல்லூரி நிறுவப்பட்டு, 21.01.2001இல் புதிய கட்டடம் வடக்குக்கிழக்கு மாகாண பிரதம செயலாளர் கிருஷ்ணமூர்த்தியினால் உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

அதுபோலவே இக்கல்லூரிக்கான ஆண்கள் விடுதி, அலுவலர்களுக்கான விடுதி ஆகியன 2004ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்தில் அமைக்கப்பட்டன.

கூட்டுறவு பயிற்சி கல்லூரி என்பது வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் உள்ள கூட்டுறவு உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழியில் நடத்துவற்கான ஒரே ஒரு பயற்சி கல்லூரியாகும். கூட்டுறவுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு குறிப்பாக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறிகள் அடிப்படை வசதிகளற்ற இடங்களில் நடத்தப்படுகின்றன. பூந்தோட்டத்தில் உள்ள கூட்டுறவு பயிற்சி கல்லூரியில் அனைத்து வசதிகளும் உள்ள போதும் அது பயன்பாடு இல்லாமல் உள்ளது.

கூட்டுறவு சங்க பரிசோதகர்கள், கூட்டுறவு பணியாளர்கள், மாணவர்கள் என்று பலதரப்பினருக்கு பயிற்சிகளை வழங்கிவந்த அந்த பயிற்சி கல்லூரியானது மாகாணசபை ஊடாக கூட்டுறவு துறையிடம் வழங்குமாறு கடந்த காலங்களில் இடம்பெற்ற மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டங்களில் மக்கள் பிரதிநிதிகளாலும், பொது அமைப்புகளாலும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டிருந்தன. ஆனாலும் இன்றுவரை அது நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளது. இந்த புதிய ஆட்சிலாவது கூட்டுறவு பயிற்சி கல்லூரியானது முழுமையாக இயக்கவைக்க வடமாகாணசபையின் ஆளுநர் அவர்கள் நடவடிக்கை வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். - என்றுள்ளது.

# அரச ஊழியர்கள் சம்பளத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை

(றிபாஸ்)

அனைத்து அரச ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளத்தை 20 ஆயிரம் ரூபாவால் அதிகரித்து வழங்குமாறு ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தால் இவ்வாறு இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் தலைவர் யு.எல்.எம். பைஸரால் ஒப்பமிடப்பட்டு ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அக்கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தற்பொழுது அரச ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற மாதாந்த சம்பளம் 2 வார கால வாழ்வாதாரத்துக்குகூட போதுமானதாக இல்லை. அதிகரித்துள்ள பொருள்களின் விலையேற்றம் காரணமாக குறைந்த மாதாந்த சம்பளத்திற்குள் தங்களது குடும்ப சுமையை நிவர்த்தி செய்ய முடியாத நிலைக்கு அரசாங்க ஊழியர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

அன்றாட வாழ்க்கைச் செலவு, கல்வி, சுகாதாரம் போன்ற அத்தியாவசிய செலவுகளுடன் இதர செலவுகளுக்காக தாங்கள் பெறுகின்ற மாதாந்த வேதனம் போதுமானதாக இல்லாத காரணத்தால், அரசாங்க ஊழியர்கள் பெரும் கடன் சுமைக்கு ஆளாகி வருகின்றனர். இதனால் அதிகமான அரசாங்க ஊழியர்கள் மன உளைச்சலுக்குள்ளாகி வருவதுடன், திருப்திகரமான சேவையை வழங்க முடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

ஆகவே, தற்போதைய அரசாங்கம் என்ற வகையில், மக்களின் வாழ்வாதார மற்றும் இன்னோரன்ன பிரச்சினைகள் பற்றி கவனம் செலுத்தி வருகின்ற ஜனாதிபதி என்ற வகையில் அரசாங்க ஊழியர்களின் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, அவர்களின் மாதாந்த வேதனத்தை குறைந்தது 20 ஆயிரம் ரூபாவால் உடனடியாக அதிகரித்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அக்கோரிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# அட்டாளைச்சேனை பலநோக்குக் கூ.சங்கம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி வசம்

(தில்சாத் பர்வீஸ்)

அட்டாளைச்சேனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக எம்.ஜே.எம்.பைறூஸ் அவர்கள் ஞாயிற்றுக்கிழமை ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

அட்டாளைச்சேனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை காலை கூட்டுறவுச் சங்கத்தின் கூட்ட மண்டபத்தில் தலைவரும், சிரேஸ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தருமான ஆதம்பாவா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, கலந்து கொண்ட பொதுச்சபை உறுப்பினர்களால் ஒன்பது உறுப்பினர்கள் பணிப்பாளர் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர். எம்.ஜே.எம்.பைறூஸ், ஏ.சீ.ரிசாத், நிசார், அஸ்வர் சாலி, எஸ்.எம்.அறூஸ், ஜலால்டீன், வாஹிட் உள்ளிட்ட இரண்டுபெண்களும் தெரிவாகியுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் ஏகமனதான தீர்மானத்துடன் எம்.ஜே.எம்.பைறூஸ் அவர்கள் அட்டாளைச்சேனை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டார். உப தலைவராக ஒலுவில் பிரதேசத்தைச் சேர்ந்த ஜலால்டீன் ஆசிரியர் தெரிவானார்.

அட்டாளைச்சேனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக மூன்று தசாப்தத்திற்கு மேலாக கடமையாற்றி பெரும் அபிவிருத்திப்பணிகளைச்செய்த மர்ஹூம் ஏ.எம்.ஜமால்டீன் அதிபர் அவர்களின் மூத்த புதல்வர் எம்.ஜே.எம்.பைறூஸ் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக கூட்டுறவுச்ச சங்கத்தை ஆட்சி செய்தவர்கள் பல்வேறு ஊழல்களிலும், மோசடிகளிலும் ஈடுபட்டனர் எனச் சொல்லப்பட்டு அது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு குற்றச்சாட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

அத்துடன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பெருவாரியான ஆதரவுடன் தேசிய காங்கிரஸ் மற்றும் புதிய தலைமுறைக் கழகம் அணியினரின் ஒத்துழைப்போடு மாற்றத்திற்கான புதிய அணி கூட்டுறவுச் சங்கத்தை கைப்பற்றியுள்ளமை விசேட அம்சமாகும்.









# ரவி தோழருக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். யாழ்ப்பாணத்தில் அஞ்சலி நிகழ்வு

## சுரேஸ் பிரேமச்சந்திரனும் கலந்துகொண்டார்



ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் வைற்ஹவுஸ் மண்டபத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியினர் தமது தோழரான கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற ரவி பொன்னுத்துரை அவர்களுக்கு அதன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் அஞ்சலி செய்தனர்.

ரவி பொன்னுத்துரை அவர்கள் 'வைகறை' இதழின் ஆசிரியாராகவும், சுற்றுச்சூழல் ஆர்வலராகவும் அதற்காக சர்வதேச நாடுகளுடனும் உறவைப் பேணுபவராகவும் தாயகத்தில் மரம்நடுகை, வீட்டுத்தோட்டம் போன்ற விடயங்களில் பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்களை ஈடுபடுத்துவதிலும் ஆர்வம் கொண்டவராக விளங்கினார். இவரை வைகறை ரவி என இலக்கியவட்டத்தில் அறியப்பட்டாலும் ஹெஸ்ரவி என்றே கட்சித்தோழர்களால் அழைக்கப்பட்டார்.

அதன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் நடந்த அஞ்சலி நிகழ்வில் கட்சி உறுப்பினர்கள் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் கலந்து கொண்டு அஞ்சலி உரையாற்றினர்.

அவரது பூத உடல் ஞாயிறு மாலை வரை அவர் பிறந்த இல்லத்தில் உறவினர் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் கனடா கொண்டுசெல்லப்படுவதற்காக மாலை கொழும்பு கொண்டு செல்லப்படுகிறது.

அஞ்சலி உரையாற்றிய சுரேஸ் க. பிரேமச்சந்திரன் -

தோழர் ரவி பொன்னுத்துரை நாற்பது வருடகால ஈ.பி.ஆர்.எல்.எவ். தோழர் ஆவார். அவர் பலகனவுகளை சுமந்திருந்தார். தமிழ் மக்களின் பொருளாதாரப் பலத்தை அதிகரிப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்ற பல சிந்தனைகளை கொண்டிருந்தார்.



தமிழ் மக்கள் எவ்வள வுதூரம் அரசியல் ரீதியாக பலவீனப்பட்டுப் போகின்றார்கள் என எண்ணி வருந்தினார். தமிழ்மக்களுக்காக கட்சிபேதங்களை மறந்து அனைவரும் ஒண்றிணைய வேண்டும் என விரும்பினார். 24 மணிநேரமும் தமிழரின் எதிர்காலத்தைப் பற்றியே பேசினார்.

தனது மாணவப்பருவத்தில் இருந்து இன்றுவரை தனது இனத்திற்காக அயராது உழைத்த ஓர் போராளி. அவருக்கும் எனக்குமான உறவு மிக நீண்டது. அவரது பிள்ளைகள்மேல் அளவற்ற பாசத்தை கொண்டிருந்தார்.

அவர் தனது மக்களிற்கு இன்னும் பல சேவைகளைசெய்ய வேண்டி இருந்தது. ஆனால் தனது இளவயதில் தனது குடும்பத்தையும் தான் நேசித்த தோழர்களையும் மக்களையும் விட்டு விடைபெற்றுக் கொண்டார்.

அவரது கருத்துக்களும் சிந்தனைகளும் எம்முடன் என்றென்றும் வாழும். மனதை கல்லாக்கி அவரை வழிஅனுப்பிவைக்கின்றோம். - என்றார்.



## கலைப்பீடாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு ஈழத் தமிழர் சுயாட்சி கழகத்தின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

அவர் நேற்று வடமராட்சியில் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி ரகுராம் தன்னுடைய பதவி விலகத் தூண்டப்பட்டுள்ளார்.

கடந்த காலத்தில் இராணுவ புலனாய்வாளர்களின் தூண்டுதலில் விரிவுரையாளராக கடமையாற்றிய குருபரன் பதவி நீக்கப்பட்டார். அதனை இந்த இடத்தில் நினைவு மீட்டிக்கொள்ளவேண்டும்.

அவர் இருந்த காலத்தில் பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகம், வன்முறைகள் செய்ய முடியாத அளவுக்கு அவர் நியாயமான செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தார். அவர் வெளியேற்றப்பட்ட பின்னர் பல்கலைக்கழக தரப்பில் எந்தவித எதிர்வினையும் ஆற்றப்படவில்லை என்பது குறையாகவே உள்ளது.

எமது பிள்ளைகள் நல்ல சமூகமாய் உருவாகுவதற்கு குருபரன் போன்ற விரிவுரையாளர்கள் பல்கலைக்கழகத்தில் இருக்கவேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாக உள்ளது. இலங்கை அரசினதும் புலனாய்வாளர்களினதும் திட்டத்தால் அவர் நீக்கப்பட்டார்.

அதேபோல், இப்பொழுது கலைப்பீட பீடாதிபதி ரகுராம் இராஜினாமா செய்துள்ள விடயம், அடுத்த துணைவேந்தராகும் வாய்ப்பு அவருக்கு இருக்கின்றது என்பதால், அவரை இதிலிருந்து அகற்றவேண்டும் என்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் சிறந்த முறையில் தனது பணிகளை ரகுராம் மேற்கொண்டிருந்தார். நாங்கள் கூட பகிடிவதை தொடர்பான விடயங்களை அவரிடம் முன்வைக்கும்போது அவர் அதற்கான தீர்வுகளைப் பெற்றுத் தந்தார். தற்போதைய துணைவேந்தருடன் எதுவுமே பேசமுடியாத நிலைதான் காணப்படுகின்றது. அவரது உலகம் வேறாகவே காணப்படுகின்றது.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வெறுமனே மதம் சார்ந்த கூட்டங்களில் அறம் சார்ந்து மாத்திரம் பேசுகிறார். அறம் சார்ந்து சிந்திப்பதில்லை. பெண்கள் விரிவுரையாளர்களாக வரக்கூடாது என்பதில் அவர் உறுதியாக உள்ளார்.

இந்தநிலையில், அடுத்த துணைவேந்தராக இள வயதில் வந்துவிடுவாரோ என்ற பயத்தில், இவ்வாறான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் முறைதவறி போவதை கண்டித்தார் என்பதற்காக, அவரை பதவி விலக தூண்டுவது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. நாங்கள் இதை வன்மையாக கண்டிக்கின்றோம் - என்றார்.

## ஐதேக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை இடம்பெற்ற பேச்சு வெற்றிகரமாக முடிவடைந்துள்ளன. நாங்கள் இரண்டு தரப்பினரும் பிரிந்து செயற்பட ஆரம்பித்ததாலே தேசிய மக்கள் சக்திக்கு ஆட்சிக்கு வர முடியுமாகி இருக்கிறது. அதனால் எதிர்காலத்தில் நாங்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நான் இருந்து வருகிறேன் என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பு தமக்குக் கிடைத்த மக்கள் ஆணையை பயன்படுத்திக்கொண்டு தான் நினைத்தபடி செயற்பட்டு வருகிறது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க மக்கள் ஒன்றுபடவேண்டும். கூட்டுறவு சங்க தேர்தல்களில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு செயற்பட ஆரம்பித்துள்ளதன் காரணமாக ஆளும்தரப்புத் தோல்வியடைய ஆரம்பித்திருக்கிறது.

இந்த வேலைத் திட்டத்தை எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நாங்கள் கடைப்பிடிக்கவேண்டும். அதனால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கலந்துரையாடி நாங்கள் இருதரப்பினரும் இணைந்து போட்டியிடவே நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதுவரை இடம்பெற்ற கலந்துரையாடல்கள் வெற்றிகரமாக நிறைவடைந்திருக்கின்றன.

அதனால் ஐக்கிய தேசிய கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து செயற்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் ஆரம்பம் முதல் இருந்து வருகிறேன். நாங்கள் பிரிந்து செயற்பட்டதாலே தேசிய மக்கள் சக்தி எங்களை முந்திச்செல்ல முடியுமாகி இருந்துள்ளது. எனவே இந்த இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்து தேர்தலில் போட்டியிடுவதற்கு நடவடிக்கை எடுத்துவரும் நிலையில் கிராமங்களில் இருக்கும் எமது ஆதரவாளர்களும் ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவாளர்களுடன் கலந்துரையாடி, உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இணைந்து செயற்பட முடியுமன இணக்கத்தை ஏற்டுத்திக்கொள்ள வேண்டும்.

ஜேஆர். ஜயவர்த்தனவுக்கு 1977இல் மக்கள் பெரும் மக்கள் ஆணை ஒன்றை வழங்கி இருந்தது. அதேபோன்றதொரு மக்கள் ஆணையையே தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்புக்கும் மக்கள் வழங்கியது. பெரும் எதிர்பாரப்புடன் அது வழங்கப்பட்டது. ஆனால் நாட்டில் தற்போது தேங்காய் விலை, அரிசி விலையைப் பார்க்கும்போது இந்த ஆளும்தரப்பிடமிருந்து இவ்வளவு குறுகிய காலத்தில் இந்த மாற்றத்தை மக்கள் எதிர்பார்க்கவில்லை.

ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்து 100 நாட்கள் கடந்துள்ளபோதும் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைத்திட்டம் ஒன்று எதுவும் இல்லை. திருடர்களை பிடிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர். திருடர்களை பிடிக்கும் பொறுப்பை நானும் மேற்கொண்டிருந்தேன். அதனால் ஆட்சியில் இருப்பவர்கள் எப்படி திருடர்களை பிடிக்கிறார்கள் என எங்களுக்குத் தெரியும்.

அதேநேரம் முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகளை அநுரவால் நினைத்தவுடனே நிறுத்த முடியாது. தான் நினைத்தால் மஹிந்த ராஜபக்சவின் ஏனைய பாதுகாப்புகளையும் நீக்க முடியும் என்று தெரிவிக்கிறார். ஆனால் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜனநாயக முறையில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டிருப்பது ஏகாதிபத்திய ஆட்சியை கொண்டு செல்வதற்காக அல்ல. குற்றச்சாட்டுக்கள் இருக்குமானால் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராகச் சட்டத்தை நிலைநாட்டுவதில் எங்களுக்கு பிரச்சினை இல்லை. அவ்வாறு இல்லாமல் நாள்தோறும் ஒவ்வொரு பிரச்சினையை எழுப்பி, மக்களின் உண்மையான பிரச்சினையை மறைத்து வருகின்றனர்.

வரி குறைப்பு தொடர்பில் தெரிவித்த விடயங்களை நடைமுறைப்படுத்துவதையே மக்கள் எதிர்பார்த்து இருக்கின்றனர். ஆனால் தெரிவித்த எதனையும் ஆளும்தரப்பு இதுவரை மேற்கொள்ளவில்லை. எரிபொருள் இறக்குமதி மற்றும் விற்பனை மூலம் லீற்றர் ஒன்றுக்கு 150 ரூபாய் முன்னாள் அமைச்சருக்குச் தெரிவித்தனர். அதனை நிறுத்தி, எரிபொருளின் விலையை குறைப்பதாகத் தெரிவித்தனர். மக்கள் அதனையே எதிர்பார்த்து இருக்கின்றனர். இவை எதனையும் செய்ய முடியாமல் போகும்போது, ரணில் விக்ரமசிங்கவின் நடவடிக்கையால் இதனை உடனடியாக செய்ய முடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

ஆளும்தரப்புச் செய்வதாகத் தெரிவித்த விடயங்கள் எதையும் செய்ய முடியாமல் போகும்போது அதற்கு ரணில் விக்ரமசிங்கவின் மீது பழி சுமத்திவிட்டு தப்பிக்கொள்ளும் நடவடிக்கையையே ஆளும்தரப்பு தற்போது கடைப்பிடித்துவருகிறது. ஆனால் வங்குரோத்து அடைந்த நாட்டை மீட்டெடுப்பதற்கு ரணில் விக்ரமசிங்க முன்னெடுத்த நடவடிக்கை தொடர்பில் மட்டும் கதைக்கமாட்டார்கள் -என்றார்.

## சொன்னால்கூட ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுந்துள்ளது. கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளை முழுமையாகப் பூர்த்தி செய்துள்ளோம். கடந்த டிசெம்பர் மாதம் இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டெழுந்தது.

ஊழல் மோசடி காரணமாக ஜப்பான் நாட்டின் 11 திட்டங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. தற்போது அந்தத் திட்டங்களை மீள ஆரம்பிப்பதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளது. சீனாவுக்கு சென்று நாம் பல விடங்கள் தொடர்பில் கலந்துரையாடினோம்.

ஏற்கனவே ஆரம்பித்த திட்டங்களைத் தொடர்வதற்கும் புதிய 76 திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நாடு மீண்டும் வங்குரோத்து அடையாதவாறு நாட்டின் பொருளாதாரத்தை நாம் கட்டியெழுப்புவோம். இனியும் ஒருபோதும் இந்த நாட்டில் நெருக்கடி நிலைமை ஏற்படாது.

குறிப்பாக நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு அரசியல் கலாசாரம் பிரதான காரணமாக அமைந்தது. மக்களின் பணம் கோடிக்கணக்கில் வீண்விரயம் செய்யப்பட்டது. ஆனால் நாம் நாட்டில் உள்ள அனைத்தையும் மாற்றியுள்ளோம். இருந்தவர்களையும் மாறுமாறே கூறுகிறோம். புதிதாக மாறுங்கள். பழையபடி இருக்க வேண்டாம்.

இதையே கூறுகிறோம். 700 இராணுவத்தினர்கள், பொலிஸார், பொலிஸ் விசேட அதிரப்படையினர் என அனைவரையும் வைத்துக்கொண்டு இந்த நாட்டை நிர்வகிக்க முடியுமா? எனவே அவர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து ஆராய்ந்து அவர்களது பாதுகாப்பை குறைக்க நடவடிக்கை எடுத்தோம். ஆனால் நீதிமன்றம் செல்கிறனர்.

மக்கள் எத்தகைய அரசியலை கோரினர். பழைய கலாசாரம் தேவையா? நாம் அதனை மாற்றியமைப்போம். ஆனால் பழைய தலைவர்களால் மாற முடியாது உள்ளது. எமக்கு வேறு வழியில்லை. 30 ஆயிரம் சதுர மீற்றர் கொண்ட வீட்டை கோருகிறார்கள். இந்த மண்டபத்தை போன்று 6 மடங்கு. ஆனால் இருவரே உள்ளனர். தனிமையை உணர மாட்டார்களா? இது நியாயமான விடயமா ? மற்றுமொருவர் 15 ஆயிரம் சதுர மீற்றர் வீட்டில் தனியாக வசிக்கிறார். எவ்வாறு அவரால் வசிக்க முடியும்? அதில் பேய்கள் இருக்கும் அல்லவா?

ஜனாதிபதி, அமைச்சர்கள், மக்கள் மாற்றமடையும் போது ஏன் இவர்களால் மாற்றமடைய முடியாது உள்ளது? இதனைச் சரிசெய்ய முற்படும்போது பழிவாங்குவதாகக் கூறுகிறார்கள். வீட்டிலிருந்து வெளியேற்றுவதாக கூறுகிறார்கள். இருவரும் வாழ்வதற்கு வீடொன்று இல்லையென்றால் நாம் பொருத்தமான வீட்டைப் பெற்றுத்தருகிறோம்.

நாம் அவர்களை மாறுமாறே கூறுகிறோம். அதில் பழிவாங்களோ, கோபமோ அல்லது ஆத்திரமோ இல்லை. புதிதாக மாறுங்கள். நாம் கூறுவதற்கு முன்னதாகவே சென்றிருக்கவேண்டும். ஆனால் நாம் கூறியும் செல்லமாட்டார்கள். வழக்கு தாக்கல் செய்கிறார்கள். அட்டையை மெத்தையின் மீது வைக்க முடியாது. அது பழைய பாதையிலேயே செல்லும் என்றார்.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் மருத்துவர் சிவமோகன் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நேற்று ஆராய்ந்த யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடையை விதிக்க மறுத்தது.

சொந்தக் கட்சி வேட்பாளருக்கு எதிராகவே பரப்புரையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிவமோகனை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் இருந்து இடைநிறுத்தி, அந்நடவடிக்கைகள் தொடர்பாக அவரிடம் இருந்து விளக்கம் கோரும் முடிவைக் கட்சியின் மத்திய குழு அண்மையில் எடுத்திருந்தது. அதற்கு எதிராக ஜனவரி 22 யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் சிவமோகன் சார்பில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கில் தமக்கு எதிராக கட்சி விதித்த இடைநிறுத்த உத்தரவுக்கு எதிராக இடைக்காலத் தடை விதிக்கும்படி சிவமோகன் கோரியிருந்தார். சட்டத்தரணி குருபரனினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் ஒரு தரப்பாக சமர்ப்பிக்கப்பட்ட வாதங்களை செவிமடுத்த நீதிபதி எஸ்.சதீஸ்கரன் உத்தரவு வழங்குவதை ஒத்திவைத்திருந்தார்.

நேற்று வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இடைக்காலத் தடை விதிக்க முடியாது என்று நீதிபதி தெரிவித்திருக்கின்றார். வழக்கின் முதல்-முகாந்திரத்திலேயே வழக்குக்கான காரணம் ஏதும் இல்லை என்ற முடிவையும் நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டிருக்கின்றார். எனினும் எதிராளிகளுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்ட நீதிபதி வழக்கை பெப்ரவரி 22ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## மோசடி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுவிக்கப்பட்டமை தொடர்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

யோஷித்த ராஜபக்ச தொடர்புபட்டுள்ள குறித்த பணமோசடி சம்பவம் சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. இதுவரை, யோஷித இந்த வழக்கில் சந்தேகநபராகப் பெயரிடப்படவில்லை. நீதிமன்றத்தில் ஒரு நபருக்கு எதிராக குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பு, சந்தேகநபராக அவரிடமிருந்து வாக்குமூலம் பெறுவது அவசியம். வாக்குமூலம் பெறுவதற்காக இந்த நபரை சந்தேகநபராக நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு சட்டமா அதிபர் பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அதுதான் வழக்கமான நடைமுறை. பிணை சட்டத்தின் விதிகளின்படி, அவர் விசாரணைகளுக்கு இடையூறு விளைவிக்காவிட்டால் அல்லது நாட்டைவிட்டு தப்பிச் செல்லாவிட்டால் பிணை வழங்குவது இயல்பானது.

யோஷித்தவுக்கு எதிராக பணமோசடி வழக்கு தொடரப்பட்டதால், தேவையான நடைமுறையின் ஒரு பகுதியாக இந்த கைது இடம்பெற்றது. பிணை வழங்கப்படுவதால் அவர் வழக்கில் இருந்து விடுவிக்கப்படுவார் என்று அர்த்தமல்ல என்றார்.

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பீடாதிபதி தனது பதவியிலிருந்து விலகியுள்ளார். அதை அடுத்துப் பல்கலைக்கழகம் பற்றி பல கருத்துக்கள் ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் வெளியாகி இருந்தன.

இந்த நிலைமை குறித்து கலந்துரையாடும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் விசேட பொதுக்குழு கூட்டம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கலைப்பீடத்தில் இடம்பெற்றது.

மீறல்களிலும், வன்முறைகளிலும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தினை பாதிக்கும் வகையிலும், உடைமைச் சேதங்களை விளைவிப்பதிலும் சீரழிவு மிக்க நடவடிக்கைகளிலும் ஈடுபடும் மாணவர்களுக்கு எதிராக பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் கடந்த காலத்திலே உறுதியான நடவடிக்கைகளை எடுக்க தவறியமை குறித்து இந்தக் கூட்டத்தில் பல உறுப்பினர்களும் தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

திட்டமிட்ட முறையில் விசாரணைகளில் தாமதங்கள் ஏற்படுத்தப்பட்டு மாணவர்கள் சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி தண்டனைகளில் இருந்து தப்பித்துச் செல்ல நிர்வாகம் வழிசமைத்துக் கொடுப்பதாகக் கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

தண்டனையின் நோக்கம் மாணவர்களை விரோதிப்பது அல்ல மாறாக தாம் செய்யும் தவறுகளை மாணவர்கள் உணர்ந்து எதிர்காலத்திலே செம்மையாகச் செயல்படும் வகையில் ஊக்குவிப்பதே என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

கூட்டத்தின் இறுதியில் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து இன்று திங்கட்கிழமை அன்று பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஓர் அடையாள வகுப்பு புறக்கணிப்பில் ஈடுபடுவது எனவும், நாளை செவ்வாய்க்கிழமை முதல் தொடர் வகுப்பு புறக்கணிப்பில் ஈடுபடுவதும் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

1. மோசமான செயல்களில் ஈடுபட்ட மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனப் பதவி விலகிய கலைப் பீடாதிபதி ரகுராம் முன்வைத்த கோரிக்கை உடனடியாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். பேராசிரியர் ரகுராம் தனது பதவி விலகலை மீளப்பெற்று பீடாதிபதியாகப் பொறுப்பேற்பதற்குரிய சூழலை நிர்வாகம் பல்கலைக்கழகத்திலே ஏற்படுத்த வேண்டும்.

2. மாணவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாக அண்மையில் இடம்பெற்ற பேரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் உடனடியாகத் திரும்பப் பெறப்படவேண்டும்.

3. மோசமான செயல்களில் ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் உறுதியாக இருக்கும்போதிலும், அவற்றைப் பயன்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் வேண்டுமென்றே காலதாமதங்கள் ஏற்படுத்தல், வேண்டுமென்றே நிர்வாகத் தவறுகளை இழைத்தல் போன்ற செயன்முறைகள் மூலம் மீறல்களில் ஈடுபட்ட மாணவர்கள் தண்டனையில் இருந்து தப்புவதற்கு நிர்வாகம் வழிசமைத்துக் கொடுக்கும் போக்கு உடனடியாக முடிவுக்கு கொண்டுவரப்படல் வேண்டும்.

4. இரண்டு மாணவர்கள் கணித புள்ளிவிபரவியல் துறையின் வாயிலில் இருந்த பூட்டினை உடைத்தமை தொடர்பிலே இடம்பெற்ற விசாரணையினை வேண்டுமென்றே தாமதமடையச் செய்த பல்கலைக்கழக நிர்வாகிகளுக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அதேபோன்று கலைப்பீடத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை வேண்டுமென்றே இழுத்தடிப்போர் மீதும் விசாரணைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

தொடர்ச்சி 9ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

## மோசடி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பிலேபல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவின் தலையீட்டினையும் கோருவதற்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

5. கலைப்பீடத்திலும் விஞ்ஞானப் பீடத்திலும் மோசமான செயல்களிலே ஈடுபட்ட மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதில் இருந்து தவறிய பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களின் மீது எமது ஆசிரியர் சங்கம் நம்பிக்கை இழந்துள்ளது. எனவே எல்லா வெளிவாரி உறுப்பினர்களும் தமது பதவியிலிருந்து விலக வேண்டும். புதிய உறுப்பினர்கள் பேரவைக்கு நியமிக்கப்படவேண்டும். இது தொடர்பான சங்கத்தின் விண்ணப்பம் ஒன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும், உயர் கல்வி அமைச்சுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

மேற்கூறிய ஐந்து கோரிக்கைகளையும் உள்ளடக்கிய கடிதம் ஒன்று பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கும், எல்லாப் பீடாதிபதிகளுக்கும் ஆசிரியர் சங்கத்தினால், இன்றைய கூட்டத்திலே மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் ஒன்றுக்கு அமையஅனுப்பிவைக்கப்பட்டது-என்றுள்ளது.

## கல்கிஸை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையகத்தில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மற்றும் மலையகத்துக்கான தொடருந்து சேவைகள் விரிவுபடுத்தப் பட்டுள்ளன. இதற்கமைய ஜனவரி 31 முதல் கொழும்பு கோட்டை தொடருந்து நிலையம் முதல்காங்கேசன்துறைதொடருந்துநிலையம் வரை பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் காங்கேசன்துறை தொடருந்து நிலையம் முதல் கொழும்பு கோட்டை தொடருந்து நிலையம் வரை இரவு தபால் தொடருந்து சேவையில் ஈடுபடும்.

இத்தினங்களில் இரவு 8 மணியளவில் கோட்டை தொடருந்து நிலையத்தில் இருந்து புறப்படும் தொடருந்து அதிகாலை 4.35 மணியளவில் காங்கேசன்துறையை சென்றடையும். அதேபோல் இரவு 8 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் தொடருந்து அதிகாலை 4.45 மணிக்கு கொழும்பு கோட்டையை வந்தடையும்.

மலைநாட்டுக்கான தொடருந்து சேவை வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மத்தியில் பிரபல்யமடைந்துள்ளது. தேசிய மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் கோரிக்கைக்கு அமைய மலைநாட்டுக்கான தொடருந்துசேவையில்மேலதிகசேவைகளைச் சேர்க்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எல்ல ஒடிசி – கொழும்பு மற்றும் கொழும்பு கோட்டை – பதுளை வரையிலான பாதைகளில் மேலதிக சேவைகள் பெப்ரவரி 10 முதல் தொடங்கப்படும். ஒவ்வொருதிங்கட்கிழமையும் சிறப்புச் சேவை இடம்பெறும்.

வடக்குக்குகாலைவேளையில்தொடருந்து சேவையை ஆரம்பிக்குமாறு பல்வேறு தரப்பினர்வலியுறுத்தியுள்ளனர். இதற்கமைய எதிர்வரும்இரண்டுவாரங்களில்கல்கிஸ்ஸை மற்றும்வெள்ளவத்தைஆகியநிலையங்களில் நிறுத்தக்கூடிய வகையில் வடக்குக்கு தொடருந்து சேவையை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

தொடருந்து என்ஜின்கள் பற்றாக்குறை காரணமாகவே சேவைகள் தற்காலிகமாக மட்டுப்படுத்தப்பட்டன. எதிர்வரும் காலப்பகுதியில் சேவைகளை விரிவுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. தொடருந்து இ-டிக்கெட் சேவையில் இடம்பெற்ற மோசடி தொடர்பில் முறையானவிசாரணைகள்மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

## சீரற்ற.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பை கைகளில் ஏந்த வேண்டும் என யாழ் . பல்கலைக்கழக பேராசியர் சி. ரகுராம் அறைகூவல் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித் துள்ளதாவது:

பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியிலான போதைப் பாவனையை தடுத்து நிறுத்துக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளவனாக, பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் ஆரம்பித்துள்ள போதைக்கு எதிரான போராட்டத்திற்கு முழுமையாக ஆதரவு கொடுப்பவனாக சமூகத்திடம் தாழ்மையான வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன்.

போதைப்பாவனைஎமதுசமூகத்தைஎல்லா விதத்திலும் பாதித்துள்ளது. பல்கலைக்கழகம் மாத்திரமல்ல , பாடசாலைகள் ,சமூக நிறுவனங்கள் என ஊடுருவியுள்ள போதைப்பாவனை எங்களுடைய சக்தி மிகு இளம் சமுதாயத்தை சீரழித்து வருகிறது

இந்த போதை பாவனை சுயமாக சிந்திக்க கூடிய எங்கள் இளம் சமூதாயத்தை மிக அசிங்கமான வழியில் சீரழித்துக்கொண்டு இருக்கிறது. போதை பாவனையை ஊக்கப்படுத்தும் முயற்சிகளுக்கு எதிராக , அதனை எதிர்த்து நிற்கும் மிக பெரிய சமூக பொறுப்புளங்களுக்குஇருப்பதாககருதுகிறேன்.

சக்திமிக்க, உலகத்தையேமாற்றியமைக்க கூடியமாணவசமூதாயம்போதைப்பொருளை அடிமையாகி வருகின்றனர். பாடசாலைகள் இந்த போதைப்பாவனையை தடுத்து நிறுத்த முடியாமல் திகைத்து நிற்கின்றன.

இந்த மண் இளம் குருத்துக்களை போதைப்பாவனை அற்ற சமூகமாக உருவாக்கி நின்ற மண்.

இன்று யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் ஆரம்பித்துள்ள போதைக்கு எதிரான போராட்டம் , ஒரு சமூக போராட்டமாக உருவாக வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு பாடசாலைகளிலும் , சமூகத்தை பற்றி சிந்திக்க கூடியவர்கள் இந்த தருணத்தை எங்களுக்காக ஒதுக்கி , இளம் சமுதாயத்தை நாசமாக்க கூடிய போதை பாவணையை தடுத்து நிறுத்தி ஒரு ஆரோக்கியான சமுதாயத்தை உருவாக்க கால பொறுப்பை கைகளில் ஏந்த வேண்டும்.

தனி நபராக சமூகமாக இந்த கால பொறுப்பை பற்றி சிந்தியுங்கள். போதைக்கு எதிராகமிகபெரியசெயற்பாட்டைமுன்னெடுக்க வேண்டிய கால கட்டமாகும்.

உங்களுடைய ஒவ்வொரு பிள்ளைகளையும் இந்த போதை பழக்கத்தில் இருந்து விடுவித்து , எங்கள் சமூகத்தை ஆரோக்கியமான சமூகமாக திடசங்கற்பம் பூணுவோம் என தெரிவித்தார்.

## கலைப்பீடாதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளுடன் வேண்டும் என்றே தொடர்புபடுத்தப்பட்-டு திரிபுபடுத்தப்படுவதாக கலைப்பீட ஒன்றியம் தவிர்ந்த 8 மாணவர் ஒன்றியங்கள் ஒன்றாக அணி திரண்டு குற்றஞ்சாட்டுகின்றன. விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், நிர்வாகத்தினர் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

தவறிழைத்த ஆசிரியர்கள், நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் தாமு-ம் போராட்டத்தில் குதிப்போம் என்று மாணவர்கள் எச்சரிக்கின்றனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இரண்டுபட்டு, நிலமை எல்லை மீறிச் சென்றுள்ள போதும் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடமிருந்து இது தொடர்பில் எந்தவித உத்தியோகபூர்வ அறிவிப்பும் வெளியாகவில்லை.

தவறிழைத்த மாணவர்கள் தண்டிக்கப்படவேண்டும், அத்தகைய மாணவர்களின்தண்டனையைதிரும்பப்பெற்ற பல்கலைக்கழகப் பேரவையின் முடிவை மீளப்பெறவேண்டும், பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களை மாற்றவேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக ஆசரியர் சங்கம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. பதிலுக்கு விஞ்ஞானபீட கற்றல் மண்டபத்தில் மாணவர்களை உள்ளே வைத்துப் பூட்டிய விரிவுரையாளர்கள் மீதும் பரமேஸ்வரன் ஆலயத்திற்குமுன்பாகஇருந்தகல்லாசனங்களை உடைத்தெறிந்த கலைப்பீடாதிபதி மீதும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று மாணவர்கள் கிளர்ந்தெழுகின்றார்கள்.

ஆசிரியர்கள்மாணவர்கள்பிரச்சினையாகப் பரிணாம வளர்ச்சி பெற்றுள்ள இந்தப் பிரச்சினை பல்கலைக்கழகத்தின் கற்றல் நடவடிக்கைகளைப் பாதித்திருப்பது குறித்து பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர். ஒ-ழுக்காற்று நடவடிக்கையைக்கூட சரிவரச் செய்யாமல் இப்படிப் மிகப் பெரிய பிரச்சினையாக்கி மாணவர் கல்வியைப் பாழடிக்கும் இவர்கள் எப்படி சமூகத்தை வழிநடத்தப் புறப்படுகின்றார்கள் என்று தந்தை ஒருவர் கவலை தெரிவித்தார். அவரது இரு மகள்கள் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கிறார்கள். தனது கருத்துக்களுக்காகத் தனது மக்களைப் பழிவாங்குவார்கள் என்று அச்சப்பட்ட அவர் தனது பெயர் விவரங்களை வெளியிடவேண்டாம்என்றுகேட்டுக்கொண்டார்.






காலைக்கதிர் Kalaikkathir

# பாடசாலைக் காணியை மீட்டுத் தரக் கோரி தண்ணிமுறிப்பில் ஊர் மக்கள் போராட்டம்

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பூதன்வயல் கிராமத்தில் தண்ணிமுறிப்பு பகுதியில் பாடசாலை இயங்கிய காணியை தனியார் ஒருவர் அபகரித்து வைத்திருப்பதால் அதனை மீட்டுத்தரக்கோரி நேற்று (திங்கட்கிழமை) காலை பாடசாலை சமூகத்தினர், ஊர் மக்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யுத்த காலத்துக்கு முன்னர் நீண்டகாலமாக பாடசாலை இயங்கிவந்த காணியை யுத்தம் நிறைவடைந்து மீள்குடியேற்றம் வந்தபோது தனியார் ஒருவர் இந்த பாடசாலை காணியை அபகரித்து பாடசாலை அடையாளங்களை அழித்து வீடு ஒன்றை அமைத்துள்ளார். அப்போதைய அரசியல் சூழல் காரணமாக போராடி குறித்த காணியை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில்பின்னர்உரியமுறைப்படி பிரதேச செயலக அதிகாரிகளை அணுகி அவர்கள் ஊடாகவும் குறித்த தனிநபரை வெளியேற்ற முடியாத நிலையில், பாடசாலை அமைந்திருந்த காணிக்கு அருகில் காணிக்கான தீர்வு கிடைக்கும் வரை தொடர் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஊர்மக்கள், பாடசாலை சமூகத்தினர் ஈடுபட்டனர்.


குறித்த போராட்டத்தில் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் உரிமைகுரல், சட்டம் எம்மை கைவிட்டு விட்டதா ? பக்கச்சார்பற்ற தீர்வைதாருங்கள், கல்வி என்பது சம உரிமை அவை எமக்கு மட்டும் கிடைக்காதமை ஏன் ?, திறமை உள்ள எமது கல்வியை தட்டிப்பறிக்காதீர்கள் போன்ற பல்வேறு பதாதைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பாடசாலை பூதன்வயல் பொது நோக்கு மண்டபத்தில், மரங்களுக்கு கீழ் 53 மாணவர்களுடன் வசதிகளற்ற நிலையில் இயங்கி வருகின்றது.

மேற்படி போராட்டத்திற்கான தீர்வுகள் கிடைக்கப்பெறாத நிலையில் பாடசாலை செல்லும் மாணவர்களை இடைநிறுத்தி மாணவர்களுடன் போராட்டத்தில் ஈடுபடுவோம் என போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.







## அஸீஸா பவுண்டேஷன் ஊடாக மருதமுனையில் நிவாரணம்

(ஷினாஸ்)

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானவர்கள் மற்றும் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தேவை உடைய 200 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கி வைக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மாவட்டம் மருதமுனை பிரதேசத்தில் இடம்பெற்றது.

ஜெர்மனிய முஸ்லிம் ஹெல்பன் நிறுவனத்தின் அனுசரணையில் ஹஸன் மௌலவி நற்பணி மன்றத்தின் சிறீ லங்கா அஸீஸா பவுண்டேஷன் ஊடாக பவுண்டேசனின் பணிப்பாளர் சாதிக் ஹசன் மற்றும் தாரிக் ஹசன் ஏற்பாட்டில் இந்த நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

மருதமுனை மஸ்ஜிதுல் நூர் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை தலைவர் எம்.ஐ.எம்.முகர்ரபால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்து இந்த நிவாரண பொருள்கள் பொதுமக்களுக்கு வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பள்ளிவாசலின் முன்னாள் தலைவர் எம்.எல்.எம்.ஜமால்தீன், அஷ்;செய்க் அபூ உபைதா மௌலவி உட்பட உலமாக்கள் பள்ளிவாசல் நிருவாகத்தினர், அஸீஸா பவுண்டேஷன் நிர்வாகத்தினர் என பலரும் கலந்து கொண்டனர்.







## உசன் இராமநாதன் முன்பள்ளியின் ஆண்டு விழாவும் கால்கோள் நிகழ்வும்

(சுபேசன்)

யா/உசன் இராமநாதன் முன்பள்ளியின் ஆண்டு விழா-கால்கோள் விழா மற்றும் மாணவர்களின் பிரியாவிடை நிகழ்வு ஆகியன ஞாயிற்றுக்கிழமை காலை உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றன.

முன்பள்ளியின் முகாமைத்துவ குழுத் தலைவர் இ.சுரேன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை கல்வி அபிவிருத்திக் கழக காப்பாளர் ந.சச்சிதானந்தன் கலந்து சிறப்பித்திருந்தார்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் ம.இராசலட்சுமி,

உசன் இராமநாதன் மகா வித்தியாலய பிரதி அதிபர் வை விஜயகுமார், பழைய மாணவன் வ.கஜேந்திரன்,

யாழ். சர்வதேச திறன் விருத்திக் கல்லூரிப் பணிப்பாளர் நிரோஜினி மற்றும் உசன் கந்தசுவாமி ஆலய பிரதம குரு இ.கேதீஸ்வரக்குருக்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இதன்போது முன்பள்ளிச் சிறார்களின் கலை நிகழ்வுகள் வெகு சிறப்பாக இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வட்டவளையில் ஓட்டோ விபத்து வெளிநாட்டவர் இருவர் காயம்

(கிஷாந்தன்)

கொழும்பிலிருந்து நுவரெலியா நோக்கி சென்ற முச்சக்கரவண்டி விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த ஐரோப்பா ஸ்லோவாக்கியா நாட்டைச் சேர்ந்த இருவர் காயமடைந்து வட்டவளை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை குயில்வத்த பகுதியில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வாடகை அடிப்படையில் வாடகைக்கு எடுக்கப்பட்ட ஓட்டோவில் பயணித்த குறித்த இருவரில் ஒருவர் ஓட்டோவை ஓட்டிச் சென்றார் எனவும் வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.



அதிகவேகத்தில் ஓட்டோவைச் செலுத்தியதாலேயே, ஓட்டோவின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனதன் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் காயமடைந்த ஐரோப்பா ஸ்லோவாக்கியா நாட்டைச்சேர்ந்த இருவரும் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், விபத்தில் ஓட்டோ கடும் சேதமடைந்துள்ளதாகவும் வட்டவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்தன கமகே தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ரவிகரன் எம்.பியின் தொடர்பகம் புதுக்குடியிருப்பில் திறந்துவைப்பு

வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களின் மக்கள் தொடர்பகமொன்று ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பகுதியில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு நகருக்கு அருகில், புதுக்குடியிருப்பு - இரணைப்பாலை வீதியில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களது மக்கள் தொடர்பகமே அவ்வாறு திறந்துவைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் புதுக்குடியிருப்பின் மூத்த கல்விமான்களில் ஒருவரான ஓய்வுநிலை அதிபர் சிவசாமி செல்வநாயகம் அவர்களால் மங்கல விளக்கேற்றப்பட்டு குறித்த மக்கள் தொடர்பகம் திறக்கும் நிகழ்வு ஆரம்பமானது.

அதனைத்தொடர்ந்துநாடாளுமன்றஉறுப்பினர்துரைராசாரவிகரன் அவர்களால் மக்கள் தொடர்பகம் திறந்துவைக்கப்பட்டதுடன், உத்தியோக பூர்வமாக அலுவலகச் செயற்பாடுகளும் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

தொடர்ந்து கலந்துரயாடல்களும், மக்கள் குறைகேள் சந்திப்புக்களும் இடம்பெற்றன.

இவ்வாறு திறந்துவைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அவர்களது புதுக்குடியிருப்பு மக்கள் தொடர்பகமானது வாரநாள்களில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் மக்களின் குறைகளைக் கேட்டறிவதற்காக திறந்துவைக்கப்பட்டிருக்கும்.

மேலும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் -

மக்களின் குறைகளைக் கேட்டறிந்து தீர்க்கும்நோக்கில் புதுக்குடியிருப்பு மக்கள் தொடர்பகம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை அண்மையில் பெய்த கனமழை காரணமாக வன்னிப்பகுதியெங்குமுள்ள வயல்நிலங்கள் பாரிய அழவில் அழிவடைபனதுள்ளன. இதனால் விவசாயிகள் பலத்த பாதிப்புக்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் புதுக்குடியிருப்புப் பகுதியிலுள்ள விவசாயிகளும் வெள்ள அனர்த்தம் காரணமாக பலத்த பாதிப்புக்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

குறிப்பாக வள்ளிபுனம், தேவிபுரம், உடையார்கட்டு, மன்னாகண்டல், கள்ளியடி உள்ளிட்ட புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள பல்வேறு வயல்நிலங்களும் அழிவடைந்துள்ளன.

அவ்வாறு அழிவடைந்த வயல்நிலங்களுக்குரிய இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும்.




எனவே எதிர்வரும் 30ஆம் திகதி இடம்பெறவுள்ள புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிளுக்குரிய இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பிலும் கூடிய கவனம் செலுத்தப்படும் என மேலும் தெரிவித்தார்.

# கிழக்கு ஆளுநர் நேற்று புல்மோடையில் ஆய்வு

## வைத்தியசாலை, சந்தை ஆகிய இடங்களை பார்வையிட்டார்

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரட்ணசேகர ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டை பகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.



கிழக்கு மாகாண ஆளுநர் செயலக செயலாளர். ஜே.எஸ். அருள்ராஜ், குழுவுடன் இணைந்து, முதலில் புல்மோட்டை பொது மருத்துவமனையை ஆய்வு செய்து, மருத்துவமனையில் நிலவும் பிரச்சினைகள் குறித்து மருத்துவமனைஊழியர்களுடன் கலந்துரையாடினார்.



2015 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு குச்சவெளி பிரதேச சபைக்குச் சொந்தமானதாகவும், ஆனால் இதுவரை பயன்படுத்தப்படாமலும் கைவிடப்பட்டும் கிடக்கும் புல்மோட்டை பொதுச்சந்தை வளாகமும் இதன்போது ஆய்வு செய்யப்பட்டது.



இந்த கட்டட வளாகத்தை உடனடியாக பொதுமக்களுக்கு திறக்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.




# காரைதீவில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டம்

(சகாதேவராஜா)

காரைதீவு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று (திங்கட்கிழமை) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும்நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.ஆதம்பாவா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான அஷ்ரப் தாஹிர், கோடீஸ்வரன், எம்.எஸ். உதுமாலெப்பை ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை பிரதேச செயலாளர் ஜிஅருணன் ஒழுங்கு செய்திருந்தார். அரைமணி நேரம் தாமதித்து கூட்டம் ஆரம்பமாகியது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதேசத்திலுள்ள சகல திணைக்களங்களினதும் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் எதிர்கால அபிவிருத்திகள் தொடர்பாகவும் திணைக்களங்கள் வாரியாக தனித்தனியாக ஆராயப்பட்டு முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

அண்மைக் காலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதுடன் அங்கு காணப்படுகின்ற குறைபாடுகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டன.

காலைக்கதிர் Kalaikkathir

## முகாமையாளர்களால் தாக்கப்பட்ட

# தோட்ட உதவி வெளிக்கள அலுவலர்களுக்கு நீதி வழங்குமாறு வலியுறுத்திப் போராட்டம்

(கிஷாந்தன்)

தோட்டத்தில் பொது முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளர் ஆகியோரால் தாக்கப்பட்டுள்ள தோட்ட உதவி வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தினால் நேற்று(திங்கட்கிழமை) போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கொட்டகலை மவுண்ட்வேர்ணன் தோட்ட தொழிற்சாலைக்கு முன்னால் திரண்ட தோட்ட சேவையாளர்கள், மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்தும், பொலிஸார் உடனடி நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றஞ்சாட்டினார்கள்.

எனவே, க்ளீன் சிறீலங்கா போன்ற வேலைத்திட்டங்கள் வெற்றியளிக்க வேண்டுமானால் பக்கச்சார்பாக செயற்படும் பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு தெரியப்படுத்தப்படும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

கடந்த 23ஆம் திகதியே மேற்படி தாக்குதல் நடந்துள்ளது. பொது முகாமையாளரும், உதவி முகாமையாளரும் இணைந்து தாக்குதலில் பாதிக்கப்பட்ட உதவி வெளிக்கள உத்தியோகத்தர்கள் இருவரும் கிளங்கன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் பிரதித் தலைவர் எஸ். இளையராஜா தெரிவித்துள்ளார்.

நான்கு நாள்கள் கடந்தும், இது தொடர்பில் பொலிஸார் மந்த கதியிலேயே செயற்பட்டுள்ளனர் எனவும், நேற்றைய தினமே சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என தகவல் கிடைத்துள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

பொது முகாமையாளர் தலைமறைவாகி இருப்பதற்கு பொலிஸார் உடந்தையாக இருந்தனரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்; குறிப்பிட்டுள்ளார்.












காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு ஆளுநருடன் பட்டதாரிகள் சந்திப்பு



(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகர மற்றும் 2024 ஒகஸ்ட் மாதம் மாகாண ஆசிரியர் போட்டி பரீட்சைக்கு தோற்றி நேர்முப்பரீட்சைக்கு தோற்றிய வேலையற்ற பட்டதாரிகள் குழுவுடன் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று (திங்கட்கிழமை) கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன் போது பட்டதாரிகள் பல கோரிக்கைகளின் அடிப்படையில் தங்கள் பிரச்சினைகளை முன்வைத்தனர், மேலும் அவர்களின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்று, இந்த பரீட்சை பெறுபேறுகள் எதிர்கால ஆட்சேர்ப்புக்கு அடிப்படையாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதாகும்.

அத்தகைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான நிரந்தர தீர்வை அவர்களால் வழங்க முடியாது என்றும், அவர்களின் கோரிக்கை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் ஆளுநர் கூறினார்.

கூட்டத்தில் உரையாற்றியபோது, இந்த நியமனங்களில் பல தரப்பினர் ஆர்வமாக இருப்பதால், அனைவருக்கும் நியாயமான முடிவு எடுக்கப்படும் என்று கூறப்பட்டது.

மேலும், நேர்முகத் தேர்வை எதிர்கொண்டவர்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்காக மாகாண கல்விச் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டுக் குழு நியமிக்கப்பட்டுள்ளதால், அவர்களின் பிரச்சினைகளை அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.





# மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு பணியகம் வவுனியாவில் பிரதி அமைச்சரால் திறப்பு



வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழு அலுவலகம் நேற்று (திங்கட்கிழமை) பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா, மன்னார் வீதியில் வவுனியா தெற்கு பிரதேச செயலக வளாகத்தில் அமைந்துள்ள கட்டடத்திலேயே குறித்த ஒருங்கிணைப்பு குழு அலுவலகம் திறந்து வைக்கப்பட்டதோடு, நாடாளுமன்ற நாள்கள் தவிர்ந்த தினங்களில் மக்கள் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றும் வகையில் இவ் அலுவலகத்தில் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். 100




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.01.2025இல் வெளியிடப்பெற்றது